உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானஸம்பந்தகுருவர்யாயநமஃ

விபரீதஞானநிக்ரஹம்

ஆகிய

ஞானபேதத்தெளிவு.

இஃது

சென்னை, வேதாகமோக்த

சைவசித்தாந்த சபையடியவருள் ஒருவராகிய

சென்னை, ப்ரீசர்ச்மிஷன்ஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

சூ. சுப்பராயநாயகரவர்களால்

சென்னை,

வெள்ளையநாடார் அச்சுயந்திரசாலையில்

பதித்துவெளியிடப்பட்டது.

1887ஆ

விலை (2) அணா.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தகுருப்யோநம:

:o:

விபரீதஞான நிக்ரஹம்

ஆகிய

ஞானபேதத்தெளிவு.

காப்பு.

போலிவாதம் புகலுவார்க்குண்மை
சாலவிண்டுரைத்துந் தந்திதாடொழுதே.

ஸ்ரீலஸ்ரீ. சூளை, சோமசுந்தரநாயகரவர்கள் "ஞானபேதவிளக்கம்" என வோர்ஞானநூல் வெளியிட்டனர். அதனை யாம் கண்ணுற்று அதிகஸந்தோஷத்தையடைந்தோம். அதற்குப்பதிலென்று ஓர் விபரீதநூல் "ஞானபேதவிளக்கச்சூறுவளி" என்னும் பேரால் யாழ்ப்பாணம் செந்திநாதையர் என்பவரால் வெளியிடப்பட்டது. இந்த நூலை யாம்கண்ணுற்றபோது ஐயரவர்களைப்பற்றி விசாரிக்கநேர்ட்டது. இவர் மஹாசைவரென்று அறிந்தோம். மஹாசைவரரிதிற்கிடைக்கு மிக்காலத்தி லருமருந்தாகக் கிடைத்த விவர்தன்மையை யாம் அதிகமாகவியந்தோம். இவர் நாங்குனேரியிலிருந்தபோது நாயகரவர்களுக்கு ஓர் கடிதம்எழுதி அவரது தோழமையையடைந்தார். அந்தக்கடிதத்தில், சித்தாந்தசாத்திரங்களாலும் ஏனைநூல்களாலும் வைஷ்ணவமதத்தை மறுத்திடப் போதுமான ஆதாரவுகள் எனக்குண்டாகவில்லையெனவும், அதனால்,

வைஷ்ணவர்களுக்கு யான் பின்னிடைகின்றேனெனவும், அத்துன்பம் விலகுவதற்குச் சிவாதிக்யரத்நாவளிமுதலிய சிவோத்கர்ஷகிரந்தங்கள் இப்போது எனக்குக்கிடைத்தனவெனவும், அத்தகையநூல்கள் மற்றுள்ளனவும் அனுப்புதல் வேண்டுமெனவும், இவ்வுபகாரஞ்செய்திருக்குந் தங்களைப் பரமாசாரியராகவே எண்ணுகிறேனெனவும் பலவாறு நாயகரவர்களைப் புகழ்ந்திருந்தனர். அதற்கு நாயகரவர்கள் தக்கவாறு விடையும், புத்தகங்களுமனுப்பி மகிழ்ந்து உத்தரபிரத்யுத்தரங்களால் ஐயரவர்களுடைய சிநேகத்தை அன்பாகவேபாராட்டிவந்தனர். இப்படிச் சிலவருஷங்களாக நடந்துவந்தது. அப்போது, ஐயரவர்கள் பலகடிதங்களால் பலஸந்தேகங்கள் நாயகரவர்களைக் கேட்டுவருவார். அவைகளுக்குத் தெரிந்தவரையில் நாயகரவர்கள் பதில் எழுதிவருவார். இப்படிமாறாது நட்புகொண்டுவருகையில், மாஸந்தோறுஞ் சஞ்சிகைரூபமாக நாயகரவர்கள் வெளியிட்டுவந்த சித்தாந்தரத்நாகரத்தில் ஆசாரியபிரபாவமென்னும்பகுதியில் "சிவனடியேசிந்திக்கும்" என்னும் ஞானப்பாடலுக்குப் பொருள்வரைந்த சஞ்சிகையொன்று அவருக்கு அனுப்பப்பட்டது. ஐயரவர்களால் பாளையங்கோட்டையில்நடத்திய பிரசங்கத்தைத்திரட்டி வெளிப்படுத்திய வோர்பத்திரிகை அந்தஸந்தர்ப்பத்திற்றானே நாயகரவர்களுக்குக் கிடைத்தது. ஐயரவர்கள் பத்திரிகையிலும் ஞானவிஷயம் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. ஞானவிஷயமேயன்றி வேறு சிலபிரமேயங்களும் இரண்டுபத்திரிகைகளிலுமொத்திருந்தன. பிரமேயங்களொத்திருந்தனவேயன்றி, அவற்றைக்குறித்து இருதிறத்தவர்களுஞ்செய்த விவகாரங்களொத்திருக்கவில்லை. நாயகரவர்கள் எழுதிய நாலுஞானம் ஐயரவர்களுக்கும், ஐயரவர்களெழுதிய இரண்டுஞானம் நாயகரவர்களுக்கும் மாறாகவிருந்தன. இவருள், நாயகரவர்கள் ஐயரவர்களுக்குப் பின்பு ஒருகடிதமெழுதினர். அதில், ஐயரவர்களெடுத்துக்கொண்ட பிரமேயங்கள் தம்மிலொத்திருந்தநலத்தைப் பிரஸ்தாபித்து, பெ

ருமானது அருளையும்வியந்து ஸந்தோஷித்தனர். அவ்வளவேயன்றி, அந்தப் பிரமேயங்களுக்கு ஐயரவர்கள் செய்த விவகாரங்களைப்பற்றி யோர்தாழ்வுங் கூறினதில்லை. பின்பு ஐயரவர்கள் நாயகரவர்களுக்கு ஓர்கடிதமெழுதினர். அதில், நாயகரவர்களை ஸந்தேகங்கேட்டுத்தெளிந்துவந்த மரபுக்குமாறுக "ஞானம்நாலு என யாம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை" எனக் கம்பீரமாகக்கூறி, திருத்தணிகைப்புராண பிரமாணத்தை மேற்கோளாகவுங்காட்டித் தாம் முன்புபாராட்டிவந்த மரியாதைசிதைவுபெற வெம்மையுண்டாக வரைந்திருந்தனர். அன்றியும், "கேட்டல் சிந்தித்தல் பாசஞானமும், தெளிதல் பசுஞானமும், நிட்டை பதிஞானமும் ஆம்" என நாயகரவர்கள் தமதுசஞ்சிகையில் எழுதியிருந்ததையும் மறுத்து "கேட்டலாதிகள் ஞானபூசையென்று சைவநூலிற்கேட்கப்படுதலால், அவை பாசஞானமாதல் யாங்ஙனம்" எனக் கடாவிமகிழ்ந்தனர். இச்சுடுமொழிகள் வரைந்திருந்த கடிதத்தை நாயகரவர்கள்பார்த்து ஐயரவர்களுக்கொருகடிதமெழுதி, அதில், இனி நமக்கு இத்தகைய விவகாரம்வேண்டாம்; தாங்கள் எனக்குக் கடிதம் எழுதவேண்டுவதில்லை; நானுந் தங்களுக்கு எழுதுவதில்லையெனத் தெரிவித்து அப்படியேயொழித்துக்கொண்டார். பின்பு இருதிறத்தவர்களுக்கும் உத்தரபிரத்யுத்தரவிவகாரங்கள்கிடையா. இங்ஙனமாக, ஷெ ஐயரவர்கள் சென்னைக்குவந்து ஏதோ வோர்நூலச்சிட்டனர். அது நாயகரவர்களுடைய சித்தாந்தரத்நாகரவிஷயங்களையே பெரும்பாலுந்தழுவி வெளிப்பட்டிருக்கின்றது. அதில் எமக்கொருஆட்சேபமுமில்லை. இவ்வளவு ஸம்பந்தங்களைப்பெற்றிருக்கும் அம்மஹாசைவர் தம்வரையில் விவகாரத்தைநடத்திக்கொண்டு போவதைவிட்டுச் சிற்சிலவிடங்களில் நாயகரவர்களைப் பிரஸ்தாபித்து வீண்தூஷணங்கள்செய்துவந்ததாகவும், இன்னுஞ் செய்துவருவதாகவுந் தெரியவருகிறது. இதற்கு மத்தியில், சீகாழிப்புராணம் பக்கத்துக்குப் பத்துத்தப்புக்குக்குறையாமல் பரிசோதித்து அச்சிட்டவோரஷ்

டாவதானியார் ஓர்பாடலில் (இருஞானம்) எனவந்த பிர யோகத்தான்மருண்டு, அர்த்தந்தெரியாமல் இரண்டுஞா னம் என்று அநர்த்தமாக்கி நமது ஐயரவர்களுக்குத் துணைபோந்தார். அவதானியாருக்கு ஐயரவர்களும், ஐயரவர்களுக்கு அவதானியாருந் துணைசேர்ந்து "வாழ வேவல்லவாமி" என்று கூடிக்குழையுமநுபவத்தி லிடை யீடுபெட்டார்கள். அவதானியார் துணைசேர்ந்தது ஐய ரவர்களுடைய அதிர்ஷ்டந்தான். இப்படிக் கூடிக்குழை ந்தவருள், அவதானியார் (இரு) என்னுஞ்சொல்லுக்கு விளக்கிய இரண்டு என்னும் பருப்பொருளைப் பரப்பொ ருளாக்கி ஐயரவர்கள் தமது சூறுவளியில் வெள்ளுக்கச் செய்தனர். இனி ஐயரவர்களும், அவதானியாரும் எப் படி வாழ்வார்களோதெரியாது. ஐயரவர்களுக்கும், நா யகரவர்களுக்குமுண்டாயிருந்த ஸம்பந்தத்தை இதுவரை யிலுங்கூறினேமாகையால், இனி அவதானியாருக்கும், நாயகரவர்களுக்குமுண்டாயிருந்த ஸம்பந்தத்தைத் தெரி விக்கின்றோம்.

இவ்வவதானியார் நாயகர்பாலணைந்து பிரசங்கங் கேட்டுவந்ததுமன்றி,சித்தாந்தரத்நாகரமுதலிய நூல்களை வாசித்தும், அவைகளின் பொருள்களை நாயகரிடம் பல தரங்கேட்டும், அவருடைய திருக்கூட்டத்திற் சேர்ந் திருந்தவர். ஐயரவர்களுக்கும், அவருக்கு மந்தராந்தர பேதமுண்டு. ஐயரவர்களி லவர் ஆயிரத்திலுமோரமிச மாக எண்ணப்படார். இது அவருடைய கல்வியறிவு களைப்பற்றிக்கூறியது. ஒழுக்கமோவெனின், ம. ா. ா. ஸ்ரீ. யாழ்ப்பாணம், சதாசிவப்பிள்ளையவர்களைக்கேட்டால் வி ளங்கும். அதை இங்குவிரிப்பது எமக்கு அநுதாபமா யிருக்கின்றது. பலருக்குந்தெரிந்திருந்தாலுமிருக்கலாம். இம்மஹாபண்டிதர் நாயகரவர்களுக்கு ஓர்காலத்தில் ஓர் கடிதமெழுதியிருக்கிறார். அதில் "தங்களை ஆசிரியராகத் தீர் மானித்திருக்கிறேன். ஞானசம்பந்தனறிய அடியேன் தங்கள்பா லன் புபாராட்டியிருக்கிறேன். தங்கள்பாலிருந்து பழகியதினலுண்டா கிய தங்கள் கடைக்கணிப்பே சிற்சிலசாமாணியர்கள் மத்தியிலிரு

ந்து பிரசங்கிப்பது" என்று தெரிவித்திருக்கின்றார். இத்தகையவ்விவர் தமது பூர்வநிலையின்மாறுபட்டது காலபலந்தான். இன்னும், இவர் அஷ்டாவதானி என்று தமதுகாலேத் தாமேகும்பிட்டுக்கொள்ளுகிறார். எங்கு அஷ்டாவதானஞ்செய்தார்? ம.ா.ா.ஸ்ரீ. வித்வான், சபாபதிமுதலியாரொருவர்மாத்திரமே ஜகத்பிரஸித்தியாகத் தமிழ்வித்வான்களில் அஷ்டாவதானஞ்செய்து பேர்பெற்றனர். கேட்பாரில்லாத காலமாய்விட்டதனால், அஷ்டாவதானம், ஷஷ்டாவதானம், தசாவதானம், ஷோடசாவதானம் என்னுந் தாந்தோன்றியவதானங்கண் முளைத்துக்கிளம்பின. இவைகளைக் கற்றுணர்ந்தபேர் மதியார்கள். நமது சிகாழிப்புராணச் சிர்த்திருத்தக்கவிராயர் இனியாவது அஷ்டாவதானஞ்செய்து காட்டுவாராயின், அவருக்கு நல்லகாஷ்மீர்சால்வைகள் ஸித்தம்பண்ணியிருக்கின்றோம். தக்கபடி முயன்று கனப்படுவாராக. இல்லையேல், ஸாதுக்களுடைய அபராதத்தைத்தேடிக்கொள்ளாமல் அடங்கி ஸுகிப்பாராக. அவதானியாரது பிரபாவத்தையும், அவரது இருஞானந் தெருஞானமாய் விட்டமையையும் இனிது தெரிவித்தோமாகையால்,இனி ஐயரவர்களுடைய இருஞானத்தையுங் கொஞ்சம் பிரகாசப்படுத்துவாம்.

ஐயரவர்களுடைய கட்சிகளாக மேலேதெரிவித்தவைகளுக்குக் கூரேசவிஜயபங்கம் (க0௯-கக0) வது பக்கங்களில் பதில்வெளிப்பட்டிருக்கின்றது. அன்றியும், "ஞானபேதவிளக்கம்" என்னு நூலினும் இனிது பெறப்பட்டிருக்கின்றது. நடுவுநிலைமையுடைய விவேகிகளுடைய ஸந்துஷ்டியே யாவரு மபேக்ஷிக்கத்தக்கது. அன்னோர் நாயகரவர்களுடைய நூல்களையும், ஐயரவர்கள் மனப்பால் குடித்தெழுதிய சூறுவளியையும் பார்த்து, அவற்றின் றன்மைகளை யறிந்தேயிருக்கின்றார்கள். ஐயரவர்கள் தமது சூறுவளிப்பெருக்கால் வீராவேசங்கொண்டுதிரியுமஸப்யத்தை யவரறிந்து குணப்பட்டுய்யுமாறு அவரிடம்

வைத்த அன்பின்மிகுதியால்,அவரது போலிநூலிலுள்ள புன்மைகளை யெடுத்துக்காட்டிக்களைந்து போக்கியுபகரிப்பாம்.

ஓர்நூலுக்குமறுப்பு ஒருவர் எழுதப்புகின், அதில் ஒவ்வொரு விஷயமாகவெடுத்து அநுவாதஞ்செய்து பரிகரிக்கவேண்டும். அங்ஙனமின்றி, நமது ஐயரவர்கள் மற்றொன்றுவிரித்தல் என்னுங் குற்றத்திற்கிடனாகத் தாங்கற்ற கலைவாய்மைகளையெல்லாங் கழறிப்போந்தார்.கேட்டகேள்விகளுக்குப்பதிலில்லை. அவர்நூலைத் தத்துச்சம் என்று நாயகரவர்கள் ஒதுக்கிவிட்டார்கள். ஐயரவர்கள்தெளியுமாறும், மந்தமதிகளுடையபிரமை நீங்குமாறும் நாயகரவர்களைப் பலதரம்வேண்டி, அவரநுமதிபெற்று யாமிதனைச்செய்து வெளிப்படுத்தினோம்.

பூர்வபட்சியார் "விஞ்ஞானகலர் பிரளயாகலர்போல நூல்வழியானன்றிச் சிவபிரானாலே சிவகதியிற் சேர்க்கப்பெறும் சிவபத்தரே சாமுசித்தரெனப்படுவார்; மந்ததரமுதலிய சத்திநிபாத முடையோராய், நூல்வழியினாலே முத்திபெற விரும்புவோராயுள்ளவரே வைநயிகரொனப்படுவார்" என்றார் திராவிடபாஷ்யகாரர் எனப்பிரமாணந்தேடி, அதற்குப்பிரமேயமாக அறுபத்துமூவருள் யாரும்வைநயிகராந்தன்மை பெறப்படலின்மையால், அன்னோர் சாமுசித்தரெனலமைவுடைத்து எனச்சாதித்தார். தாம்காட்டியபிரமாணத்தால் வைநயிகர், சாமுசித்தரிலக்கணங்கள் வெளிப்பட்டனவேயன்றி, அறுபத்துமூவர் சாமுத்தரென வெளிப்பட்டதில்லை. சிவபிரானாலே சிவகதியிற்சேர்க்கப்பெறுவாரே சாமுசித்தரெனக்காட்டவந்தவர் எப்படிச்சிவபெருமான் சேர்க்கின்றார் என்பதையுங் காட்டாதொழிந்தனர். அறுபத்துமூவர் சாமுசித்தரென யாண்டும்பெறப்பட்டதில்லை. சாமுசித்தராவார் ஜடபரதாதிகளெனச் சிவாக்ரயோகிகள் கூறினர். இதனால், நமது ஐயரதுசித்தாந்தம் தாளறுந்துவீழ்ந்தது. இனி, அறுபத்துமூவருள்ளே ஒருவருக்குப்பாலூட்டுதலும், ஒருவருக்குச் சூலைநோய்புகுத்து

தலும், ஒருவருக்கு ஓலைகாட்டுதலும்ஆகிய வேதாகம விதியிலமையாத தீக்ஷைபுரிந்து சிவபெருமான் ஆட்கொண்டனர்என வோர்விஷயத்தைப் பிரஸ்தாபித்தனர். இதற்குப் பிரயோசனந்தெரியவில்லை. சாமுசித்தருக்குச் சிவபிரானருளும்பெற்றியை வேதாகமவழியாகக்காட்டப்போந்தவர் அதனைவிடுத்து, சாமுசித்தரெனத் தாம் கூறிய ஞானசம்பந்தாதிகளுக்கு அவ்வேதாகமவிதியிலமையாததீக்ஷையைத் தாபித்ததென்னை? அது வேதாகமபாஹ்மா? அல்லது மேலான வேறுவிதியா? வேதாகமங்களிலமையாத தீக்ஷைக்குரியவர்கள் வேதாகமஸித்தமான சாமுசித்தராதல் யாங்ஙனம்? பாலூட்டுதன் முதலியவைகளைத் தீக்ஷையென்றுரேயன்றி அது இன்னதீக்ஷையென்று காட்டாதொழிந்தனர். அதற்குப்பேரில்லையெனின், அது ஒரு தீக்ஷைதானென்று எங்கேகண்டார்? நம்மவர் கூறியதே வேதாகமத்திலில்லாத விசித்திரமாகமுடிந்தது.

மேல், அறுபத்துமூவருள் ஒருவருஞ் சிவாகமங்களைக்கேட்டுஞ் சிந்தித்துந் தெளிந்தும் நிட்டைகூடியும் அருள்பெற்றதில்லையென்று நம்மவர்கூறினர். "அளவிறுெல்கலைகளாய்ந்து" எனத் தடுத்தாட்கொண்டபுராணத்தினும், "அருமறைநான்கினேடாறங்கமும்பயின்றுவல்லார்" எனத் தில்லைவாழந்தணர்புராணத்தினும், "ஆயவந்தணரருமறையுருத்திரங்கொண்டு, மாயனூரறியாமலர்ச் சேவடிவழுத்துந், தூயவன் பொடுதொடர்பினி விடையறுச்சுருதி, நேயநெஞ்சின ராகியதொழிற்றலைநின்றார்" என உருத்திரபசுபதிநாயனூர்புராணத்தினும், "தந்-திகழுமரபினேதுவிக்குஞ் செய்கைபயந்தார் செய்வித்தார்" "சிந்தையினிற்றெளிந்தார் சிறியபெருந்தகையார்" எனச் சண்டேசுரநாயனூர்புராணத்தினும், "சுருணீக்கிமலர்விக்குங் கலைபயிலத்தொடங்குவித்தார்" எனத் திருநாவுக்கரசுசுவாமிகள்புராணத்தினும்,"நாலுகரணங்களுமொன்றா நல்லவறிவுமேற்கொண்டு, காலும்பிரமநாடிவழிக் கருத்துச்செலுத்தக்கபாலநடு, ஏலவேமுன்பயின்றநெறி யெடுத்தமறைமூ லந்திறப்ப, மூலமுதல்வர்திருப்பாத மடைவார்கயிலைமுன்னடைவார்" எனப் பெருமிழலைக் குறும்பநாயனூர் புராணத்தினும்,"நெஞ்சிற்றெளியவிங்குணர்

ந்தார்" என ஷெபுராணத்தினும், "சித்தந்தெளியச் சிவனஞ்செழுத்தோதுவாய்மை, நித்தந்நியமமெனப் போற்றுநெறியினின்றார்" எனச் சோமாசிமாறநாயனார்புராணத்தினும், "உள்ளநிறைகலைத்துறைகளொழிவின்றிப்பயின்று" எனச்சிறுத்தொண்டநாயனார்புராணத்தினும், "மறவாமையானமைத்தமனக்கோயிலுள்ளிருத்தி, யுறவாதிதனை யுணருமொளிவிளக்குச் சுடரேற்றி, யிறவாதவானந்தமெனுந்திருமஞ்சனமாட்டி, யறவாணர்க்கன்பென்னுமமுதமைத்தர்ச்சனைசெய்வார்" என வாயிலார்நாயனார்புராணத்தினும், "சங்கரனைச்சார்ந்தகதை தான்கேட்குந்தன்மையார்" எனப் பத்தராய்ப்பணிவார்புராணத்தினும், "நாதாந்த - தாரணையாற்சிவத்தடைந்தசித்தத்தார்" எனச் சித்தத்தைச்சிவன்பாலே வைத்தார் புராணத்தினும், "பொருள்பெறுவேதநீதிக்கலையுணர்பொலிவின்மிக்கார்" எனப் பூசலார்நாயனார்புராணத்தினும்பெறப்படுதல் என்னை? அறுபத்துமூவரேயன்றி, ஏனைத்தொகையடியார்புராணத்தும் ஓதுதலும், வேட்டலும், கேட்டலும், சிந்தித்தலும், தெளிதலும், நிட்டைகூடுதலும் ஆகியநலங்கள் பிரத்யக்ஷமாகக்காணப்படலால், பூர்வபட்சியார்தொடுத்தவழக்குப் புரைவழக்காயிற்று.

அபரஞானம், பரஞானம் என்பவைகளின் குறிகள் உமாதேவியாரது திருமுலைகளிரண்டுமெனவும், அவ்விருமுலைகளினின்றுசொரிந்த அமுதையுண்டவராகிய ஞானசம்பந்தருணர்ந்தஞானமு மப்படியே அபரஞானமும், பரஞானமுமாக முடிந்தனவெனவும், அபரஞானமாவது சாஸ்திரஞானமெனவும், பரஞானமாவது அநுபூதிஞானமெனவும் பிரஸங்கித்து, சாமுசித்தராகிய திருஞானஸம்பந்தமூர்த்திநாயனாரை வைநயிகராக்குவது சிவாபராதமாய் முடியுமென்று பூர்வபட்சியார்கூறினர். பரஞான அபரஞானக்குறிகளாகத் தேவியினது திருமுலைகளை எந்தவேதம், அல்லது எந்த ஆகமங்கூறின? திருமுலைகளிரண்டுமிரண்டுஞானங்களானால் அத்திருமுலைகளினின்றுசொரிந்தபால் யாது? அதற்குமோர்பேர்வேண்டும். அன்றியும், அந்தப்பாலுமிரண்டாகி அபரஞானப்பால், பரஞானப்பால் என விளங்கும். அப்போது ஞானப்பாலுண்டார்

சம்பந்தர்என்னுங் கனங்கெடும். அபரஞானம் பரஞானத்தின்முன்னர் பூர்வபட்சமாகையால், உயர்ந்த ஞானத்தையடைந்தா ரென்றதோடு தாழ்ந்தஞானத்தையு மவரடைந்தாரென்பது அவரை யிழிவுகூறுவதாகவேமுடியும். இப்படியே அம்மையாரையும் அபரஞானத்திருமுலை, பரஞானத்திருமுலை என்னு நாணுதிக்யமான வங்கங்களுடையாரென விழிவுரைப்பதாகமுடியும். அபரஞானமும், பரஞானமுங் காயுங்கனியும்போல்வன. கனியானபோது காய்ப்பிரஸங்கமிராது. இரண்டு மோர்காலத்தில் ஜீவியாதபோது எப்போதும் நிலைபெருய் விளங்குந் தேவியாரது திருமுலைகளை யவற்றிற்குபமானங்கூறி மகிழ்ந்தது துக்கமாகவேமுடிந்தது. பரஞானம் அநுபூதிஞானமாயினமையால், அபரஞானம் அநுபூதிசேராத ஞானமேயாகும். இவ்விரண்டுஞானங்களையுமடைந்தார் சம்பந்தரெனின், ஒளியையும் அத்துடன் இருளையு மவரடைந்தாரெனப்போதரும். அப்படியே ஒளியையுமிருளையுந்தருவன திருமுலைகளென்னுந் தோஷமுஞ்சேரும். அன்றியுந் திருமுலைகளையுண்டார் பிள்ளையாரென்னுது திருமுலையினின்றுசுரந்தபாலைப் பொன்வள்ளத்திற்கறந்து, பின்னர் அதின்ஞானத்தைக் கூட்டிக்குழப்பிக்கொடுத்தார்தேவியாரென்று உண்மைநூல்கள் கூறுகின்றன. இங்கே திருமுலையும், திருமுலைப்பாலும்நீங்க ஞானம் அவற்றில் வேறுபொருளாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இதனுல், திருமுலைகளை அபரஞானக்குறி, பரஞானக்குறி என்றுகாட்டியவுண்மையும் பங்கத்தையடைந்தது. இன்னும், பால்கறந்தது ஒரு திருமுலையிலா? இரண்டுதிருமுலையிலுமா? இரண்டுதிருமுலைகளிலுமென்ருல், அபரஞானப்பாலும், பரஞானப்பாலுங்கலந்து பாலினது பரிசுத்தத்வங்கெடும். நல்லபசும்பாலிற் பிரைக்குற்றஞ்சேர்ந்தபடி. இவைகளைப் பரியாலோசிக்கையில், ஞானஸம்பந்தருக்கு இனிவேறுபெயரையே நம்மவர்நாட்டவேண்டியது. இவ்வளவுக்கிடங்தேடிய நமது ஐயரவர்கள் புண்ணியம் மிகப்பெரிது! இனி, ஞானஸம்பந்தர் வைந

யிகரன்று, சாமுசித்தர் எனச்சாதிக்கவந்த பூர்வபட்சி யார் (தெருவிலேகிடக்குங் கோடரியையெடுத்துக் காலின்மேற் போட்டுக்கொள்வதுபோல) தமதுஸித்தாந்தத்துக்குத் தாமே நேத்திரபங்கந்தேடிக்கொண்டார். எங்ஙனமெனின், சாமுசித்தருக்கு நம்மவர்காட்டியவிலக்கணத்தில் அபரஞானமாகிய கலைஞானம், அல்லது சாஸ்திரஞானம் விலக்காயிருக்கின்றது. ஆகமங்களாகிய சாஸ்திரங்களைக்கேட்டன்முதலியவற்றை வைநயிகரிலக்கணமாக நம்மவர் காட்டியிருக்கின்றார். இவ்விலக்கணம் எப்படியோ சாமுசித்தருக்குவந்துசேரும்? சேராதபோது எப்படியோ ஞானஸம்பந்தர் சாமுசித்தராவார்? ஞானஸம்பந்தருக்கு ஸாமுசித்தரிலக்கணங்கூற வாசையுண்டாயின், இரண்டுஞானங்களுள், அபரஞானத்துக்குச் சீட்டுக்கொடுத்து, பரஞானத்தைமாத்திரமே நிறுத்திக்கொள்ளவேண்டும். ஒருஞானத்தைமாத்திரம் நிறுத்திக்கொண்டால், நமது ஐயரவர்களுடைய இருஞானமும், தணிகைப்புராணஞானமும், காழிப்புராணஞானமுங் கலகலத்துப்போகும்.என்னசெய்வார்பாவம்!இப்படியலக்கண்பட்டழியும் ஸித்தாந்தத்தை நம்மவர்தேடிக்கொண்டது அவரைக்கண்கலங்கச்செய்துவிட்டது.இன்னும் விரிக்கிற்பெருகும்.

இதுநிற்க, சீகாழிப்புராணத்திலேயுள்ள ஞானஸம்பந்தரதுபுராணம் பெரியபுராணத்திலேயுள்ள ஞானஸம்பந்தரதுபுராணத்தை ஆதாரவாகக்கொண்டிருக்கின்றது என நம்மவர் நாணின்றிக்கூறினர். சீகாழிப்புராணத்திலப்படிக்கூறப்படவில்லை. "சிவஞானம்-பாங்கினிலோங்கியஞானம்-கலைஞானம்-மெய்ஞ்ஞானம்" எனப் பெரியபுராணத்தில் விதந்துகூறியபடிச் சீகாழிப்புராணத்திற் கொள்ளக்கிடத்தில. அதில், "பல்கலைகளிடைப்புணர்ஞானம் - பரம்பொருளுட்படரிருஞானம்" எனக்குன்றக் கூறியிருக்கின்றது. ஐயரவர்களது ஆசை எப்படியாவது ஒட்டப்பார்க்கிறார். எங்ஙனமொட்டும்? இவ்விஷயத்தை முன்விவகாரத்தில் நாயகரவர்கள் பரிஷ்கரித்திருக்கின்றார். அதனையறியாதவர்

போல நம்மவர் மீண்டுமெதனைப்பிரஸ்தாபித்தது அருவருப்பாக முடிந்தது. நமது ஐயரவர்கள் தமதுதோழராகிய அவதானியார்காட்டிய (இருஞானம்)=இரண்டு ஞானம்என்பதை அப்படியேசாதித்துக்கொடாமல், அவனைத்தெருவில்விட்டார். இருஞானம் என்பதில் வேறுகாத மெய்ஞ்ஞானம் எனப்பாடத்தைத் திருத்திக்கொண்டார். இதில், அவருக்கொருவிவகாரமுந்தேறவில்லை.

மேல், "கேட்டலாதி நான்குஞானமுஞ் சீகாழிப்புராண ஆக்கியோருக்குப் புலப்படாதுபோன்மைக்குக் காரணம்யாது" என நம்மவர் குதுகலித்தார். நமதுஐயரவர்களுக்கு அதுபுலப்படாதுபோனமைக்குக் காரணம்யாது என்பதை விசாரித்தலே காரணத்தைக்காட்டும்.

இனி, நம்மவர் கைலாசபரம்பரைத் திருவாவடுதுறையாதினத்தார் சாஸ்திரங்களைக் குருமுகமாகப்பரம்பரையிற்கேட்டு வருபவராகையால், அந்தப்பரம்பரையில் வந்த ஸ்ரீகச்சியப்பமுனிவர் நாட்டிய இரண்டுஞானமே அமைவுடைத்து என்கிறார். பரம்பரையிற்கேட்டலே தக்கது என்றுகொள்ளுநம்மவர் திருவாவடுதுறையாதினத்துக்கும், ஏனையாதீனங்களுக்கும் முரணுண்டாயிருத்தலை எவ்வாறுபரிகரித்துக்கொள்வர்? திருவண்ணாமலையாதினம் ஸ்ரீஞானப்பிரகாசசுவாமிகள் சிவஞானசித்தியாருக்கியற்றியவுரையைத் திருவாவடுதுறையாதினம் ஸ்ரீசிவஞானமுனிவர் மறுத்திருக்கின்றனர். இனி ஞானப்பிரகாசமுனிவர் பரம்பரையிற்கல்லாதவராவர்போலும். இன்னேரொருவரிலொருவர் மாறுபடுவதெற்றுக்கு? நமது ஐயரவர்கள் இனி ஞானப்பிரகாசசுவாமிகளுக்கும் நாயகரிடமாரோபித்த "கானமயிலாட" என்னுங்கவியைக் காட்டத்துணிவார்போலும். சாஸ்திரங்களைக் குருமுகமாகக்கற்பதொன்றே போதாது. "கருத்திலுறைதிருவருளு மிறைவனூலுங்கலந்து" என்னுஞ் சிவப்பிரகாசத்துணிவே அமைவுடைத்து. இங்ஙனமறிந்துகுணப்படாமல் ஓராதீனத்தைப் பெருமைகூறி, ஏனையாதீனங்களுக்குச் சிறுமைதேடுவது

அநாதரணியமாயிற்று. ஸ்ரீவைத்யநாதநாவலரியற்றிய "இலக்கணவிளக்கம்" என்னுநூலுக்கு ஸ்ரீசிவஞானசுவாமிகள் "இலக்கணவிளக்கச்சூறாவளி" என மறுப்புஒன்று எழுதியிருக்கின்றனர். இனி, வைத்தியநாதநாவலருங் குருமுகமாகக்கற்றுத்தெளியாதவரும், சிவஞானமுனிவர் மாத்திரமே குருமுகமாகக்கற்றுத்தெளிந்தவருமென நம்மவர்கூறுவார்போலும். நமது ஐயரவர்கள் அநியாயமாக வீண்பிரஸ்தாபங்களைக் கொண்டுவந்து அபராதியாவது பெருந்துக்கமாயிருக்கின்றது. நாயகரவர்களுடைய கண்டனநூல்களையெல்லாம் நன்குபடித்து, நாமுந்தேர்ந்து விட்டோமென்று எண்ணிக்கொண்டு (தீட்டியகல்லிற் கூர் பார்ப்பதுபோல) அவருக்கே கண்டனம்எழுதப்புகும்ஐயரவர்கள்செயலே "கானமயிலாட" என்னும்பாடலுக் கிலக்காய்விட்டது. பாஞ்சராத்திரம், மாயாவாதம், உலகாயதம், போலிச்சைவமுதலிய நிலைகளினின்றுவாதிக்கும் பெருங்கூட்டத்தவரையே துச்சமாகவொதுக்கியிருக்கு நாயகரவர்கள் நமதுஐயரவர்களை எவ்வளவாக மதிக்கப் போகிறார்? நமதுமஹாசைவர் மனப்பால்குடித்ததுபோதும். இனியாவது நாணியொதுங்குவாராக.

இங்ஙனநிற்க, நமதுநண்பர் சேக்கிழார்கூறிய ஞானப்பாடலும், கச்சியப்பமுனிவர்கூறிய ஞானப்பாடலுமொரேகருத்தைக்கொண்டிருப்பனவென்பதை விளக்குதற்கு, "சிவனடியேசிந்திக்கும்" என்னும்பாடலையும், "மேவருஞானமிரண்டு" என்னும்பாடலையுமுதகரித்து, அவைகளுக்குத் தனித்தனியுரையெழுதி, இரண்டுபாடல்களும் பிரதிபதங்களையேகொண்டிருப்பனவென்பதை ருசுப்படுத்துவோமென்று பிரதிஜ்ஞைசெய்து முடிவில் "சிலபதங்கள் இரண்டுசெய்யுளினுங் குறைந்துமிகுந்துமிருக்கும்" என முன்வைத்தகாலைப் பின்னேவாங்கிக்கொண்டார். நம்மவர் பிரதிபதங்களைக்காட்டிவந்ததில், சேக்கிழார்வாக்கிற்பெறப்பட்ட "சிவஞானம் - பாங்கினிலோங்கியவென்பதன் பின்வந்தஞானம்-உணர்வரிய" என்னும்பதங்களுக்குக் கச்சியப்பமுனிவ

ர்பாடலில் பிரதிபதங்களைக்காணோம். "உவமையிலா" எனச் சேக்கிழார் கூறியதற்கு "ஒப்பிலா" என்று கூறியதன்றி அதிகமாக "உயர்" என்பதைச்சேர்த்து "ஒப்பிலாவுயர்" என்று தம்பிரான்சுவாமிகள் கூறிமுடித்தனர். தம்பிரான்சுவாமிகள்பாடலைப்பார்த்துச் சேக்கிழார்பாடவில்லையன்றோ? சேக்கிழார்சுவாமிகள்பாடலைப் பார்த்தேயன்றோ தம்பிரான்பாடினர்? ஒன்றைப்பார்த்து மற்றொன்றுபொருண்மாற்றமுண்டாகாமல் பாடுகிறபோது அசலுக்கு அதிகமாகப்பதங்களைச் சேர்த்துந்தள்ளியுங் கெடுப்பது மரபாகுமா? "உவமையிலா" என்பதற்கும், "உயர்" என்பதற்கும் அர்த்தவிகல்பமதிகம். இவைகளை யொன்றுபொருத்துவது துஸ்ஸாத்யம். "உணர்வரிய" என்னுஞ் சேக்கிழாரது பிரயோகம் அவலமெனத்தள்ளியும், "உயர்" என்னுந் தமதுபிரயோகம் ஸபலமெனச்சேர்த்துங் கச்சியப்பமுனிவர் சிக்கறுத்து உண்மையை நாட்டினார்போலும். இப்படியே "சிவஞானம்" என்பதுமுதலியவைகளையுந்தள்ளினார்போலும். நமதுஐயரவர்கள் இரண்டுபாடல்களையுமொன்றாக்கத்தொடங்கி இவ்வளவு அநர்த்தத்துக்குக் கொண்டுவந்துவிட்டார். சேக்கிழாரதுகருத்தைத்தழுவி நமதுகச்சியப்பமுனிவர் கூறியதுண்டெனின், உள்ளபதங்களைநீக்கியும், இல்லாதபதங்களைச் சேர்த்துங் கலக்கத்துக்கிடஞ்செய்யார். அன்றியும், நமது ஐயரவர்கள் சிந்திக்கும்என்னும்பதத்திற்கு உணர் எனவும், பெருகும்என்னும்பதத்திற்கு அளிக்கும்எனவும் பிரதிபதங்களைத்தேடிச் சாதித்தார். இவற்றுள், சிந்தித்தல் சித்தத்தின்றொழில். உணர்தல் மனத்தின்றொழில். பெருகும்என்பது செயப்படுபொருள் குன்றியவினை. அளிக்கும் என்பது செயப்படுபொருள் குன்றாவினை. பெருகும்-அளிக்கும் என்பவைகளி லர்த்தவிகல்பமுமுண்டு. இவ்வஸங்கதங்களையெல்லாங் கச்சியப்பமுனிவர்மேலேற்றவழிதேடி அபராதப்படாதிருப்பாராக. நமது ஐயரவர்கள் வேறொரு அஸங்கதத்தையுந்தேடினர். என்னெனின், "திருப்பெருகு" என்பதை எழுவாய்த்தொகாநிலைத்தொடராகக் கொள்ளாது

ஆக்கப்படுபொருட்கண்வந்த இரண்டாம் வேற்றுமைத் தொகையாகக்கொண்டு, அதற்கு "செல்வத்தையீட்டுகின்ற" எனப் பொருள்விரித்ததேயாம். இவ்வாறு பொருள்விரித்ததற்குக்காரணம் செயப்படுபொருள்குன்றிய முதனிலைத்தனிவினையாகிய "பெருகு"என்பதைச் செயப்படுபொருள் குன்றாததாகக்கொண்ட தமது புலமைத்தலைமையேயாம். அங்ஙனமாயினும், பெருக்கும்என்பதற்கு ஈட்டும் என்று எவ்வாறு பொருளுண்டாகும்? இப்படிச் சிதைவுபடுத்தி இரண்டுபாடல்களையும் அநியாயஞ்செய்த நமதுதோழ ரவ்வளவிலமையாது "சிவனடியே" என்னுஞ் சேக்கிழாரதுபாடலில், இரண்டேஞானம் எனச சாதித்தற்கு அச்செய்யுளிலுள்ளபதங்களை யதிகபிரயாஸத்துடன் றம்மனத்திற்கிசைந்தவண்ண மாற்றிநிறுத்தியோர்குருட்டுவழியாகப்பொருள்கொண்டு, அப்பொருள் கோள் நிரனிறைப் பொருள்கோளாமெனச் சாதித்தார். அவர் பொருள்கூறியவிதம் நிரனிறைப் பொருள்கோளாகாது. எங்ஙனமெனின், "பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும், வேறுநிரனிறீஇ முறையினு மெதிரினும், நேரும் பொருள்கோ ணிரனிறை நெறியே" என்னும்விதியை யெதிர்த்து இழிவேற்றுநிற்றலால். இங்ஙனமாகவே, "யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை, யேற்புழி யிசைப்பது கொண்டு கூட்டே" என்னும்விதிக்கே நமதுதோழருமை யொருவாறிசைந்து கொண்டுகூட்டுப்பொருள்கோளிற்றுனேயமையும். ஒன்றை மற்றொன்றாகமலைந்து வரைந்தமாண்பினர் எங்ஙன முண்மையுணர்வார்? அங்ஙனமவருழந்து பொருள்கொண்டும், மரமாகியமரம், மண்ணாகியமண் என்பன போல ஞானமாகியஞானம் எனப் பிரயோசன மிழந்தபரிசே நிலைத்தது. அன்றியும், "சிவஞானமாகிய கலைஞானத்தையும்" என வவர்கொண்டபொருள் (சாரைப்பாம்பாகிய நீர்ப்பாம்பையும்)எனக்கொள்ளும் பொருளையே சார்ந்து அழிந்தது. அந்தப்பாடலை நிரனிறையாகக் கொள்ளவேண்டின், சிவஞானமும், பாங்கினிலோங்கியஞானமும், முறையே கலைஞானமும், மெய்ஞ்ஞானமுமாகும் என

முடிக்கவேண்டியது. இதனுண்மையை "கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண்மேனி, மதிபவளமுத்தமுகம்வாய்முறுவல், பிடிபிணைமஞ்ஞைநடைநோக்குச்சாயல், வடிவினளேவஞ்சிமகள்" என்பதனுனுமறிக. இவ்வளவு கூர்ந்தறியப்போதாதவர் தாமுமொரு ஸித்தாந்தபிரவர்த்தகராக வெளிப்பட்டது காலசுபாவமேயாம்.

இங்ஙனநிற்க,ஸ்ரீசேக்கிழாரதுபாடலில் நிரனிறைப் பொருள்கோடற்கு யாதானுமோரேதுகாட்டவேண்டும். பொருள்கோளெட்டனு ணிரனிறைப்பொருள்கோள்வகையானன்றி வேறுபொருள்கோள்வகையா னமையாதபோதன்றோ வதுபொருந்தும்? நம்மவர்கூறியது நிரனிறைப்பொருள்கோள். கூட்டியது கொண்டுகூட்டுப்பொருள்கோள். கொண்டுகூட்டுப்பொருள்கோளையே நிரனிறைப்பொருள்கோளாகமயங்கினர். நம்மவர் நிரனிறைப் பொருள்கோள்என்னு மிஃதொன்றினையே யாவர்சொல்லவோ கேட்டுஎழுதினர்.அவ்வளவேயன்றி யேனைப்பொருள்கோள்களுண்டெனக் கேட்டுமறியார். இனியிதற்குப் பதில்சொல்லவருவாரெனின், கொண்டுகூட்டுப்பொருள்கோளாகிய நிரனிறைப்பொருள்கோள் எனச் சாதிக்கத்தலைப்படுவார்போலும். சிவஞானமாகிய கலைஞானம் என விரண்டையுமொன்றுசேர்த்து நாட்டுகின்றவராகையால், இவருக்கு இரண்டுகோள்களு மொருகோளாகத் தட்டில்லை. நமது ஐயரவர்களுடையவழியைக் கண்டுபிடித்து, அவருடையமாணுக்கர்யாரேனு மினித் தாமுமோருரையாசிரியராகப்புகுங்கால், நிரனிறைப்பொருள் கோளில் சிவஞானம்=கலைஞானம், பாங்கினிலோங்கிய ஞானம்=மெய்ஞ்ஞானம் என ஐயரவர்கள் முறையிற் கொண்டதுபோற் கொள்ளாமல், சிவஞானம்=மெய்ஞ் ஞானம். பாங்கினிலோங்கியஞானம்=கலைஞானம் என வெதிரிற்கொண்டு தம்மவிதிகளைத்தாபிக்கவுங்கூடும். சிவஞானம், கலைஞானமாதற்கு நமது ஐயரவர்களுக்கு எவ்வளவுநியாயமுண்டோ, அதற்குமேலிட்டநியாயம் அவ

ருக்குத்துணைபோகும் பின்னவர்க்குச் சிவஞான மெய்ஞ் ஞானங்களை யொன்றுசேர்த்தற்குண்டாகாமற் போகமாட்டாது. இன்னும், சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகுசிவஞானமானது பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கியஞானமாகுமெனவும், உவமையிலாக்கலைஞானமானது உணர்வரியமெய்ஞ்ஞானமாகுமெனவும் பொருள்கூறி உபந்யஸிக்கத்தக்க சகோதரர்களும் ஐயரவர்களுக்குத் துணைசேருவார்கள். இவைகளைச் சித்தஸமாதானத்துட னினியாவது ஆய்ந்தடங்குவாராக.

இனி, அந்தப்பாடல் பொருள்கோளெட்டனுள், யாற்றுநீர்ப்பொருள்கோளி லிசைந்து, அதிற் பெறப்பட்ட வொவ்வொருஞானத்திற்குந் தனித்தனி யொவ்வொரு விசேடணங்களமைந்து செவ்வனேபொருள்கொள்ளக்கிடக்கவும், அதிற்போந்த ஞானமுடிவுகளுன்கினருமையையு நாடாது அந்தோ நமது ஐயரவர்கள் மலடு கறந்துமாழ்கினர். இவ்வரியந்யாயம் ஞானபேதவிளக்கத்திற்பெறப்பட்டிருக்கவு மதனைப் பரிகரித்துக்கொள்ள வகையறியாமல், அதனைப் பாராதவர்போல நாடகம்புரிந்த நம்மவரது நடுவுநிலைமை சாலப்பெரிது. இவ்வளவு கௌரவமுடையவர் "சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகுசிவஞானம் என்பதிலே தெரிந்தெடுத்த சிந்திக்குஞானத்தை ஆதாரமாகக்கொண்டு, நேர்ந்தநேர்ந்தபடி தெளிதல், கேட்டல், நிஷ்டை என்பவைகளை வலிந்திழுத்துச் செலுத்தினர்." நாயகரவர்களென்று ஓர் ஜாலம்பகர்ந்தனர். ஆசாரியபிரபாவம் என்னுநூலில் நாயகரவர்கள் நாலுவிதஞானங்களையும் விளக்கியதற்குத் தக்கந்யாயங்காட்டி யிருக்கின்றார்கள். நாயகரவர்கள் காட்டியவற்றுள் சிந்திக்குஞானமாத்திரமொவ்வுமென வச்சொற்பிரயோகத்தாலேற்று ஏனைக் கலைஞானம்கேட்டலும், பாங்கினிலோங்கியஞானம் தெளிதலும், மெய்ஞ்ஞானம் நிட்டையுமாகுமென்பதில் விபரீதங்கொண்டார். அவர் விபரீதம் எமக்குப்பொருளல்ல. கல்விகேள்விகளில் வல்லபெரியோர்களொப்புவதே எமக்

குப்பொருள். ஐயரவர்களைத் தெரியாதவரொன்று பரிதாபப்பட்டுக்கொண்டிருக்கு மெமக்கு அவருடைய சொல்லிரைச்சலானது பனியினது சலசலப்புமாத்திரமாக வொழிந்தது.

நமது நண்பர் "சிவபெருமானுடைய திருவடியை மறவாமலிருக்கச் செய்யுஞ் செல்வத்தைக் கொடுப்பது (முதலாமடியில்) ஓர் சிவஞானமேயாக, பிறவியை வேரோடு அறுப்பது (இரண்டாமடியில்) மற்றோர் ஓங்கிய ஞானமேயாக, நுண்ணுணர்வுடையோர்க்கன்றி அவ்விருஞானங்களின்பேதம் சிற்றறிவுடையோர்க்குப் புலப்படாதென முகிழ்த்தபெருங்கருணையினாலே, சேக்கிழார்நாயனார் அவற்றை இவைதாமெனப் பெயர்மாத்திரையினாலே காட்டப்புகுந்து முன்னையதைக் கலைஞானமென்றும், பின்னையதை மெய்ஞ்ஞானமென்றும் நிரனிறைப்பொருள்கோளை மேற்கொண்டு (மூன்றாமடியிலே) அவ்விருஞானங்களையும் அமைத்தருளினார்" எனப் பிரஸங்கித்து, இதனால் சேக்கிழார் வெற்றெனத்தொடுத்தலும், கச்சியப்பமுனிவர் குறைபடக்கூறுதலுமாகிய குற்றங்களைப்பெற்றிலரெனச் சாதித்தார்.

நுண்ணுணர்வுடையோர்க்குப் புலப்பட்டுஞ் சிற்றறிவுடையோர்க்குப் புலப்படாமலும் விளங்கும் ஞானங்களின்பேதங்களைச் சேக்கிழார்பெருமான், அவையிவைதாமெனப் பெயர்மாத்திரையானே விளக்கிக்காட்டப்புகுந்ததுண்டெனின், "சிவனடியேசிந்திக்குந்திருப்பெருகு சிவஞானம்" என்பதற்குப்பக்கத்தில் "உவமையிலாக்கலைஞானம்" என்பதையும், "பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கியஞானம்" என்பதற்குப்பக்கத்தில் "உணர்வரியமெய்ஞ்ஞானம்" என்பதையும் அமைக்கவேண்டும். அங்ஙனமின்றி மேலேபலவகையாக யாம்பரிஹஸித்துக் காட்டிய மயக்கங்களுக்கெல்லா மிடஞ்செய்யவுரைப்பது சிற்றறிவுடையோர் தெளியவிளக்கும் வெளிப்படையன்றாம். ஐயரவர்களது நிரனிறைப்பொருள்கோளை அதிகமாயெடுத்து விசாரித்துத் தீர்மானங்கொடுத்திருக்கின்றோமாகையா லீண்டுமீண்டும் பதில்சொல்வதநாவசியமாயி

ற்று. மேல், சேக்கிழார் வெற்றெனத்தொடுத்தலென்னுங் குற்றமும், கச்சியப்பமுனிவர் குன்றக்கூறலென்னுங்குற் றமும்படக்கூறினாரில்லையென்று நம்மவர்கூறியது வெறுஞ்சொல்லேயன்றி நியாயஸமர்த்தனமொன்று மங்கே காணோம். அவ்விருவர்பாடல்களையு மொன்றுபடுத்தினாலந்தத்தோஷங்களைக்கற்பிக்க விடஞ்செய்கிறதன்றி வேறில்லையாகையால், அவர்கள்பாலினியாவதிரங்கி நமது ஐயரவர்கள் அக்குற்றங்க ளவர்மேலேறாதிருக்கும் வழிதேடிச்சுகிப்பாராக.

இனி, தேவியாரதுதிருமுலைகள் ஞானமுலைகளாமென்பது "போதமுலைசுரந்தளித்தபுண்ணியத்தாயாரையும்" என்றசேக்கிழார் திருவாக்கிற்பெறப்பட்டதெனவும், "செவ்வியமெய்ஞ்ஞானமுணர்" எனவும், "அருண்ஞானமுண்ட" எனவும், "பெருகொளிஞானமுண்ட" எனவும், "ஏகமாஞ்சிவமெய்ஞ் ஞானமிசைந்தவர்" எனவும் போந்தவைகளால் பிள்ளையார் பரஞானமாகிய மெய்ஞ்ஞானமுணர்ந்தாரென்பதும், "அந்தமில்சீர்மறைக ளாகமங்களேனை யகிலகலைப்பொருளுணர்ந்தாரருளிச்செய்ய" என்பதனால் அவர் அபரஞானமாகிய கலைஞானமுணர்ந்தாரென்பதும் பெறப்பட்டனவெனவும் நம்மவர் எடுத்துக்காட்டினார். இது ஸர்வாஸங்கதமென்பதை நிரூபணஞ்செய்வாம். "சத்திதன்வடிவேதென்னிற் றடையிலா ஞானமாகும்" என்னும்பிரமாணத்தால் சிவசக்தியாகிய உமாதேவியாரதுவடிவமே ஞானமாகிறபோது அவரது திருமுலையைப் போதமுலையென்றது உசிதமன்றாம். அவரது எல்லாவங்கங்களும் ஞானமேயாம். இவ்வுண்மையறியாது திருமுலைமாத்திரமே ஞானமாமெனச்சித்தாந்தப்படுத்தவந்தது சித்தாந்தவுணர்ச்சிபோதாத குறைவேயாம். ஏனையவருதகரித்த "செவ்வியமெய்ஞ்ஞானமுணர்" என்றதுமுதலிய ஸந்தர்ப்பங்களெமக்கொன்றும் பாதகமானதில்லை. இரண்டேஞானம் பிள்ளையார்அடைந்தாரென்றிருந்தாலொழிய எமதுபட்சம் சோர்வடையாது. நம்மவருக்கு அந்தஸந்தர்ப்பங்கள் எவ்வளவுபிரயோசனப்படு

மோ, அவ்வளவுபிரயோசனம் எமக்குமுண்டாமென்க. அபரஞானபரஞானங்கள் கிடையாவென்று யாம் சாதித்தாலொழிய எம்மைப் பூர்வபட்சியார் புறங்கூறுவதற்கிடமில்லை. நம்மவர்கூறு மிரண்டுஞானங்களில் கேட்டலாதிகளடங்கினவோ, அடங்காதனவோ தெரியவில்லை. கேட்டல் சிந்தித்தல் தெளிதல் அபரஞானமும், நிட்டை பரஞானமுமாம். நாலாகக்கூறுஞானங்களும், இரண்டாகக்கூறுஞானங்களும் விரிந்துஞ்சுருங்கியும் விளங்குமொரேஞானமேயாம். இதனையே "ஏகமாஞ்சிவமெய்ஞ்ஞானமிசைந்தவர்" என்னும் பிரயோகம்விளக்கியது. நம்மவர் இரண்டேஞானம் எனச்சாதிக்கத் துஜங்கட்டிக்கொண்டதை மறந்து "ஏகமாஞ்சிவமெய்ஞ்ஞானம்" என்னும் வாளையெடுத்துத் தமதுதுஜத்தைத் தாமேயறுத்துக்கொண்டார். யாம் நாலுவிதம் ஞானமென்றது "சிவனடியே" என்னும்பாடலிலன்றி, எல்லாஸந்தர்ப்பங்களிலுமன்று. ஒன்று, இரண்டு,மூன்று, நான்கு என ஞானங்களை ஸந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு சாதிக்கலாமென்று நாயகரவர்கள் ஞானபேதவிளக்கத்திற் கூறியவுண்மையே சாலும்.அன்றியும், "ஏகமாஞ்சிவமெய்ஞ்ஞானம்" என்னுமிதனை நம்மவர் தமதுபரஞானத்துக்கு உதாரணமாகக்காட்டினர். சேக்கிழார்பாடலில் (சிவஞானமாகியகலைஞானம்) எனப்பொருள்கொண்டு சிவஞானத்தை அபரஞானமாகச்சாதித்தார். இப்படிக் குழறுபாடுபுரியு நமதுஐயரவர்களுடைய ஞானம் அநாமத்துஞானமாகவே யொதுக்கலாயிற்று. இந்தநியாயமே திருநாவுக்கரசுசுவாமிகள்புராணத்தில் நம்மவர்காட்டிய ஸந்தர்ப்பங்களுக்குஞ்சிறக்கும்.

திருவிளையாடற்புராணத்தில் "திருமுலைப்பாலினோடு ஞானமுந்திரட்டிச்செம்பொற் - குருமணிவள்ளத்தேந்திக்கொடுக்க வப்பாலன்வாங்கிப் - பருகியெண்ணிறந்தவேதாகமமிவைபற்றிச்சார் வாய்-விரிகலைபிறவுமோதாதுணர்ந்தனன்விளைந்தஞானம்." என்னும்பாடலில், (விளைந்தஞானம்) என்பதற்கு மெய்ஞ்ஞானகலைஞானங்களென்னு மிரண்டுஞானங்களும் விளைந்தவெனப்

பூர்வபட்சியார்சாதித்தார். இதில், இரண்டுஎன்னும் பிர யோகமில்லை. இல்லாதபோது நம்மவருக்கு அது எப்படி ஸாமஞ்சஸமாகும்? அவர் இரண்டுஎன்றபடி யாம் நாலு என்றாலென்னை? நாலுஞானம்விளைந்தன என்பதற்கும், அநேகஞானம் விளைந்தன என்பதற்கும் அது இடந்தரலால் ஐயரவர்களுடைய இருஞானம் விபசரித்தது.மேல், "திருவிளையாடற்புராணகர்த்தாவுக்குஞ் சிந்தித்தல், தெளிதல், கேட்டல், நிஷ்டைஞானங்கள் உடன்பாடல்லனவென்பது பெற்றோம்" என்கிறார். இதற்கும் யாம் முன்னர்விவகரித்தவுண்மையே இறையாம். அன்றியும், திருவிளையாடற்புராணக்காரர் கேட்டல் சிந்தித்தல்களைத் தமதுநூலின்மறுத்திருந்தாலொழிய நமது ஐயரவர்கள்மதுரவாசகம் மணக்கமாட்டாது. அங்ஙனமின்மையால், நம்மவரதுகூற்று ஒரு நலத்தையு நாடாதொழிந்தது.

இதுநிற்க, திருக்களிற்றுப்படியாரில் உய்யவந்ததேவர் "தூயசிவஞானஞ்சுரந்துண்டார்"எனவும், ஒழிவிலொடுக்கவுரையியற்றிய சிதம்பரசுவாமிகள் "திருஞானஸம்பந்தப்பிள்ளையார் பரஞானக்கண்ணினாலே உணர்ந்து புகழ்ந்துசுட்டிநின்றார்" எனவுங்கூறினாராகையால் அவர்களுக்குங் கேட்டலாதிகளுடன்பாடில்லையென்று நம்மவர்சாதித்தார் இந்தப்பிரமாணங்களில் கேட்டலாதிகளையெடுத்து அன்னோர்மறுக்கவுமில்லை. நம்மவர்நாட்டும் பரஞான அபரஞானங்களிரண்டே ஞானமென அவர்கள்சாதிக்கவுமில்லை. நம்மவர் தமக்கு அநுகூலமாகக்கொண்டபடி யாமுங்கொண்டோம். இந்த நுட்பங்களையாய்ந்தடங்கி ஸுகிப்பாராக.

இனி, "உயர்ஞானமிரண்டாமாறுமலமகலவகலாதமன்னு போதத் திருவருளொன்றென்றதனைத் தெளியவோதுஞ்சிவாகமம்" என உமாபதிசிவம் செய்தருளிய திருச்செய்யுளின் ஓர் பாகத்தால் மெய்ஞ்ஞான கலைஞானங்கள் பெறப்படுகின்றன வெனவும், இவ்விரு ஞானங்களே சேக்கிழார்வாக்கிலமையுமெனவும் பூர்வபட்சியார் நிரூபித்தார். எங்ஙனமெனின், அதில், "மாறுமலமகல" என்பதற்கு நீங்காத

(பிறவிக்குக் காரணமாகிய பாசம்) அறுமாறு எனப் பொருளு ண்டாவதாகவும், இது "பவமதனையறமாற்றும்" என்னுஞ் சேக்கிழார் திருவாக்கிலிசைந்ததெனவும், இப்படியே அதில் "தெளியவோதுஞ் சிவாகமம்" என்பதற்குத் தெளிய ஞானத்தை யுணர்த்துஞ்சிவாகமம் எனப்பொருளுண்டா வதாகவுங்காட்டி முந்தியது மெய்ஞ்ஞானமும், பிந்திய து கலைஞானமுமாகுமென்று கூறினர். மலம் என்பதற் குப் பிறவிக்குக் காரணமாகியபாசம் என்று வலிந்து பொ ருள்கொண்டார். சேக்கிழார்திருவாக்கில் பிறவியைமாற் றும் எனப் பெறப்பட்டிருக்கிறதேயன்றி, அதற்குக் கார ணமாகிய மலம், அல்லது பாசம் என்று பெறப்பட்டதி ல்லை. பிரதிபதங்களாற் சாதிக்காமல் அர்த்தங்களைக்கொ ண்டுசாதிப்பது இதற்கேயன்றி வேறுபிரமேயங்களுக்கு ஞ் சிறக்கும். இவ்வளவாதரவு தமக்கிருப்பதை நாடா மல் கலைஞானம்என்பதில் கேட்டலும், பாங்கினிலோங் கியஞானம் என்பதில் தெளிதலும், மெய்ஞ்ஞானம் என் பதில் நிஷ்டையுங் கொள்ளக்கிடைத்திலவென்று நாயக ரவர்களைச்சுட்டி யோரிடத்திற் பிரஸ்தாபித்தார். மலம்எ ன்பது மும்மலஸமுதாயநாமம். ஈண்டுப்போந்தமலம் ஆ ணவமலமேயாம். சகசமாகிய வாணவமென்பதுபோதா வே மாறுமலமெனவமைந்தது. மாறுமலமகலவென்றது முதல்கெடாது சத்திகெட்டுநிற்குந் தன்மையைக்காட்டி யது. இவ்வாறுபொருள்கோடலே அமைவுடைத்து. இத னைவிடுத்துக் கன்மமலம் அல்லது பாசம்என்பதன் காரி யமாகி, நாசத்தையடைந்து இல்லாமற்போகின்ற பிறவிப் பாசமாக வாண்டுப் பொருள்கூறுவது செல்லாது. "மா று" என்பது அதனையெதிர்த்து மறுக்கின்றமையால். இ ந்தவுண்மையால், அது சேக்கிழார்வாக்கிலிசைந்தமை யாது. அதனுல், நம்மவர் கஷ்டப்பட்டுத்தேடிய செம் பொருள் கரும்பொருளாகியது. இதுநிற்க, "தெளியவோ துஞ் சிவாகமம்" என்பதில், கேட்டலாதிகளைத் தலையிடியா கக்கொண்டு வருந்துகின்றவர்க்கு அவற்றினுந் தாழ்ந்த நிலையாகிய வோதுதலென்னும் பேரிடிமுழக்கங்கேட்கப்

பட்டது. "தெளியவோதும்" என்பதற்குத் தெளிதன்ஞானமுண்டாதற்கு ஓதுமெனப்பொருள்கிடத்தலால் ஓதுதலும், தெளிதலுமாகிய நிலைகள் கிளம்பின. ஓதுதலுந் தெளிதலும் பெறப்படவே ஓதுவித்தலும்,கேட்டலுந்தாமேயமையும். இவ்வாறே பிறவுநேரும். இப்படித் தாம் தேடியபொருள்கள் நஷ்டமாயினமையால், ஐயரவர்கள் இனி இன்னுமேதாவதுண்டோவென அரிப்பரித்துப் பார்க்கவேண்டியதே. அன்றியும், தாம்காட்டிய இந்தப்பிரமாணத்தில் பரஞானத்தை முதலிலும், அபரஞானத்தை முடிவிலுங்கண்டுகூறினர். இவரெடுத்துக்கொண்ட சேக்கிழார்பாடலில் அபரஞானத்தை முதலிலும், பரஞானத்தை முடிவிலுங்கண்டார். முறைதப்பிவிளங்கு மிவைகளெப்படியோ வொன்றுக்கொன்றுதாரமாகிநின்று, உண்மையைப்பயக்கும்? நமதுபண்டிதர் சேக்கிழார்பாடலில், நாயகரவர்கள் நிரூபித்த கேட்டலாதிகள் முறைமாறியிருக்கின்றன வெனவும், அதற்கவர்காட்டிய சித்தியார்ப் பிரமாணத்தில் அவை முறையாகவிளங்குகின்றனவெனவும், அதனுல் முறைதப்பியும், முறைபெற்றும் வரும்பாடல்க ளொன்றற்கொன்றுதாரமாகமாட்டாவெனவும் ஓரிடத்திற் சாதித்தாராகையால், அதை அப்படியேயெடுத்து ஈண்டு ஐயரவர்களுக்குப் பஹுமானஞ்செய்துவிட்டோம். பின்னர் "முத்தி-நான்றமலர்ப்பதத்தோடு" என வுண்மை விளக்கத்தாற்பெறப்பட்ட திருவடிஞானத்தையே "சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகுசிவஞானம்" எனச் சேக்கிழார்விளக்கினர் என்றுகூறினர். முத்தியை முடிவாகக் கூறும் அடிஞானத்தை மெய்ஞ்ஞானமாகக்கூறுது தாம் கலைஞானமாகக்கொண்ட சிவஞானத்தி லொன்றுசேர்த்தது பயனற்ற செய்கையாயிற்று. உண்மைவிளக்கத்தை வருவித்துக்கொண்டபயனும் இதுவென வேற்படாமற் போயிற்று. விரிக்கிற்பெருகும்.

சிவப்பிரகாச வியாக்கியானத்தில் "திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் முதலிய சமயாசாரியர்கள் மூவருக்கும், காரைக்கா

லம்மையார் முதலினோர்க்கும் உண்டாகியஞானம் திருவருண்ஞானமாமெனவும், அருணந்திசிவாசாரியர் முதலிய சந்தானசாரியர்களுக்குண்டாகியஞானம் சிவாகமஞானமெனவும்" பெறப்படலால், திருஞானசம்பந்தருக்குக் கேட்டலாதிகள் அஸங்கதமெனவும், அவை ஸந்தானசாரியர்களுக்கே ஸங்கதமெனவும் பூர்வபட்சியார்புலப்படுத்தினர். திருவருண்ஞானமென்றது "ஓதாமல் வேதமுணர்ந்தோன்" என்றபடியமைவது. சிவாகமஞானமென்றது ஓதி அவற்றைத்தெளிவது. இவற்றைவிரிக்கின், தன்னைத் திருவருளிரண்டறக்கலந்து வேதங்களை யுள்ளிருந்து உபகரிப்பதும், குருவையதிட்டித்து அவைகளைப் புறம்பிலிருந்து உபகரிப்பதுமாகிய சீர்ப்பாடேநிலைக்கும். அவற்றின்பய னிரண்டுமோர்க்கங்களினு மொன்றுகவேசேரும். இவற்றின் பாகுபாடறியாது கேட்டலாதிகள் ஞானஸம்பந்தருக்கு உண்டாகவில்லையென்றது மயக்கவுணர்ச்சியேயாம். எமதுபட்சமாகிய கேட்டலாதிஞானங்களையும்,ஐயரவர்கள் பட்சமாகிய பர அபர ஞானங்களையும் இனிதுவிசாரித்துத் தெளிவிப்பாம். கேட்டலாதிகள் ஸாமுசித்தருக்கு அமையாவென்று சாதிக்குநம்மவர் அபரஞானமென்று தாம்கொண்ட சாஸ்திரஞானத்தை ஸமர்த்திக்கும்வழி யாதோவறிந்திலம். அது சாஸ்திரங்களையோதுகிறதா? கேட்கிறதா? அல்லது உள்ளத்திலுணர்கிறதா? சாஸ்திரமானது அக்ஷர ஸமூஹசேர்க்கையினமைந்து வரியும்ஒலியுமாகி நேத்திரம், சிங்குவை, சுரோத்திரம்என்னு மிவைகளை வாயில்களாகப்பெற்று, அவற்றின்வழியாக மனத்திற்சென்று பதிந்து பொருளைப்பயப்பது.அக்ஷரத்தினதுரூபமானது நேத்திரத்திற்கும், அதன்சேட்டிப்பானது சிங்குவைக்கும், அதன் ஒலியானது சுரோத்திரத்திற்கும், அதன்பொருளானது மனத்திற்கும்விஷயமாகும்.நேத்திரத்திற்கு விஷயமாதலைக்காண்டலெனவும்,சிங்குவைக்கு விஷயமாதலை ஓதலெனவும், சுரோத்திரத்திற்கு விஷயமாதலைக் கேட்டலெனவும், மனத்திற்கு விஷயமாதலை உணர்தலெனவும் அறியவேண்டியது.மனத்துக்கு விஷயமாகுங்கால்,முதல்

நேத்திரம், இரண்டாவது சிங்குவை, மூன்ருவது சுரோத்திரம், நாலாவது மனம் என்னும்வரிசையில் வந்தமையுமேயன்றி அந்யதாகூடாது. இந்தமுறைதப்பி யொரோதடவையிலது மனத்தில்வந்து சேராது. இதனுல், ஐயரவர்களுடைய கலைஞானப்பிரஸங்கம் காண்டல், ஓதல், கேட்டல், உணர்தல் என்னுமளவில் பரிவஸானம்பெறும். உணர்தலில் சிந்தித்தலுந் தெளிதலுமடங்கும். மெய்ஞ்ஞானப்பிரஸங்கம் இவற்றின்ருக்கொழிந்து,கண்டோம், ஓதினேம், கேட்டோம், சிந்தித்தோம், தெளிந்தோமென்னும் போதங்கழன்று ஆன்மஞானப்பிரகாசமும், சிவஞானப்பிரகாசமும் விரவியொன்றுபட்டு அத்துவிதநிலைபெறுமளவில் பரிவஸாநம்பெறும். இப்படிப் பகுத்துணர்கிறபோது ஐயரவர்களுடைய அபரஞானம் கேட்டல் சிந்தித்தல் தெளிதல்களைத்தழுவுகிறதா? அதிக்கிரமிக்கிறதா? என்பதைப புத்திமான்கள் யோசியாமற்போகார். தழுவிக்கிடத்தலே அதனது சீவனமாகமுடிந்தது. தழுவாதபோது அபரஞானநிலை பூர்த்திகட்டாது. இவ்வுண்மையைத் தெளியப்போதாதகுறைவால், கேட்டலாதிகளை அநியாயமாய்த்தூஷித்துத்திரிவது அவருக்குக்ஷேமக்குறைவேயன்றி வேறில்லை. மனத்திற்கு விஷயமாகுங்கால், அது சுரோத்திரத்தினின்றே புடைபெயர்தலால், அங்கிருந்தே கேட்டல்-சிந்தித்தல்என வுண்மைநூல்கள் ஞானங்களைத்தொடங்கிக்கூறின. காண்டலும்,ஓதலும் கேட்டலைப்போல உணர்தலுக்கு ஸமீபித்திராமையால், அவைகளை ஞானங்களென ஸாதுக்களங்கிகரிக்கவில்லை, இவற்றுளந்தர்ப்பூதமாகிய ஓதுவித்தல், கேட்பித்தன் முதலியவைகளையு மவ்வாறேயொதுக்கினர். இவ்வுண்மையை ஞானவேள்விப்பிரஸங்க வியாக்கியானஸந்தர்ப்பத்தில் திராவிடபாஷ்ய மஹாமுனிவர் செவ்வனே விளக்கியிருக்கின்றனர். இவற்றைப் பரியாலோசிக்குங்கால் ஐயரவர்கள்சாதிக்கு மபரஞானத்துக்குக் கேட்டலினின்றே தொடக்கம் ஏற்படுகின்றது. அதனுல், அவரது அபரஞானமே கேட்டலாதிகளாகின்றன.

தமது கலைஞானம் இன்னது என்று தெரியாமல் கேட்ட லாதிகளைத் தூஷித்துக்கொண்டுவந்த நம்மவரதுபோதம் அதிகமந்தமாயிருத்தலை யாம் அதிகமாக நொந்துகொள் ளுகிறேம். அபரஞானமே கேட்டலாதி ஞானங்களும், கேட்டலாதி ஞானங்களே அபரஞானமுமாக் முடிந்த மையால், நம்மவர் எடுத்துக்காட்டிய கலைஞானப்பிரமா ணங்களெல்லாம் எமக்கு அவிரோதமேயாயின. அபர ஞானம் தெளிதல்வரையிற் பரிவஸாநமுறலால், நிட்டை யே பரஞானமென்பது சொல்லாமே யமையும். இவ்வுண் மையுணர்ந்தபேர் (கேட்டலாதிகளை யாதுகாரணத்தினுல் கலைஞான மெய்ஞ்ஞானங்களைப்போலத் தமதுநூலில் சேக்கிழார் எடுத்துவிதந்திலர்) என ஐயரவர்களோர்மூலை யிற் கடாவியதைக்கண்டு நகையாமற்போகார்.

இன்னுங்கொஞ்சஞ் சொல்லுகிறேம். பூர்வபட் சியார்காட்டிய பரஞான அபரஞானங்கள் கேட்டலாதிக ளாக முடிந்தமையால் அவர் ஸாமுசித்தருக்குக் கூறிய பரஞான அபரஞானங்களும், யாம் காட்டுங் கேட்டலா தி ஞானங்களு மொன்றேயாயின. எம்முடைய வாதம் "சிவனடியே" என்னும்பாடலில் நான்குஞானம் பெற ப்பட்ட விஷயத்தைப்பற்றிமாத்திரமேயன்றி வேறில்லை. அந்தப் பாடலில், பதங்களினமைவுநோக்கி னிரண்டுஞா னமில்லையென்பதே எமதுவாதத்தின் தீர்ப்பு. இவ்வு ண்மைதேராத நம்மவர் எமக்கொன்று கூறுவாராக. அவ ரதுகொள்கை பர அபரஞானங்கள் ஸாமுசித்தருக்கே யாக, வைநயிகருக்குணர்த்துநூல்களில் அவை கூறப்ப ட்டிருக்குமாறு என்னை? அல்லது அந்த நூல்களில் ஸாமுசித்தருக்கே பரஞான அபரஞானங்களெனவாவ து கூறப்பட்டிருக்கின்றனவா? ஸாமுசித்தருக்கே பெ றப்பட்ட பரஅபரஞானங்களை வைநயிகருக்குரிய நூல்க ளில் பிரஸ்தாபிப்பதுங் குற்றமாகுமென்றறிக. நம்மவ ர்க்குப் பரஅபரஞானங்களென்னுஞ் சொற்களேயன்றி யவற்றின் பொருள்களும், பாகுபாடுகளுந் தெரியாமை

யால், இடனறியாது அவைகளைப் பிரயோகிப்பதே தமது வெற்றியாகத் தீர்மானித்து ஸந்தோஷித்தார். இனியாவது அறிந்து அடங்குவாராக.

இதுவனையிற் பூர்வபட்சியார்தேடிய பிரமாணத்தில் மூவர்முதலிகளும்,காரைக்காலம்மையாருந் திருவருண்ஞானம் பெற்றவர்களென வெளிப்படுகிறதேயன்றித் தாம் தர்பித்தபடி அறுபத்துமூவருந் திருவருண்ஞானம் பெற்றவர்களென வெளிப்பட்டதில்லை. அறுபத்துமூவருட் சிலரையே சிவப்பிரகாசர்தேடியெடுத்தார். தாம்தேடியபிரமாணம் தமக்கேதலைநோயாகமுடிந்தது. சிவப்பிரகாசர்கூறிய சித்தாந்தம் நமதுஐயரவர்கள்சித்தாந்தத்தில் விரோதப்படுதலை இனியாவதுகூர்ந்துயோசிப்பாராக. சிவப்பிரகாசரதுசித்தாந்தம் யுக்தம், அல்லது அயுக்தம் என விசாரித்துத் தீர்மானஞ்செய்ய வெமக்கிப்போது அவசியமில்லாமையால், அதனையிங்கே விசாரியாமல் ஒழித்தாம். இனிப்பூர்வபட்சியார் வாதவூரடிகளை ஸாமுசித்தரிலும், வைநயிகரிலுஞ்சேர்க்காமல், வேறு எந்தக்கணக்கிற்சேர்த்து ஒதுக்கினரோ தெரியவில்லை. இப்படியலக்கண்பட்டழியு மஸங்காத்மவாதத்தை நினைக்குந்தோறும் எமக்கு அதிகபயமாயிருக்கின்றது.

இனிச் சேக்கிழாரது பாடலில் சிந்திக்கு ஞானத்தை முதலும், தெளிதன் ஞானத்தை இரண்டாவதும், கேட்டன் ஞானத்தை மூன்றுவதும், நிட்டைஞானத்தை நாலாவதுமாகக் காட்டி, அதற்குப் பிரமாணமாக (கேட்டலுடன்சிந்தித்த றெளிதனிட்டை கிளத்தலெனவீரிரண்டாங் கிளக்கின்ஞானம்) எனச் சித்தியானை நாபகரவர்கள் பிரமாணமாகத் தேடியது ஒவ்வாது எனப் பூர்வபட்சியார் சாதித்தார். சித்தியாரில் முதற்கண்வந்த கேட்டன்ஞானம் மூன்றுவதிலும், இரண்டாவது போந்த சிந்தித்தன்ஞானம் முதலிலும், மூன்றுவதமைந்த தெளிதன்ஞானம் இரண்டாவதிலுஞ் சேக்கிழார்பாடலிலமைந்து முறைமாற்றமுண்டாவதே அவர் கூறுந் தோஷம். இவ்வளவி

லமையாது எங்கே அதற்குஸமாதானஞ் சொல்லிவிடு கிருர்களோவெனப்பயந்து அதற்கு ஸமாதானஞ் சொல்லத்தொடங்கின், சேக்கிழாரைப் பாடவறியாதவரெனக்கூறவரும் எனவும் ஙியாயங் கண்டுபிடித்தார். பூர்வபட்சியின் துர்ப்பலத்தை யெடுத்துக்காட்டி அதிகமாக அலசிவிடுவது ஐயோ பாவம் என எமக்கே பரிதாபமாயிருக்கின்றது. அவர் குணப்பட்டுய்யவேண்டுமென்னு மிரக்கமும் பாதிக்கின்றது. "நகுதற்பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண், மேற்சென்றிடித்தற்பொருட்டு" என்னும் பிரமாணமும் முன்வந்து நிற்கின்றது. இவைகளைப் பரியாலோசிக்கிறபோது உண்மையைக்கூறித் தெளிவிப்பதே யுசிதமென வெளிப்படலால், அவ்வுண்மையை யீண்டு வெளிப்படுத்துவாம்.

திருக்குறளில், "சுவையொளியூறேசை நாற்றமென்றைந்தின் - வகைதெரிவான் கட்டேயுலகு" எனச் செந்நாப்போதர் திருவாய்மலர்ந்தருளினர். இதில், சப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தங்களென்னும் பஞ்சதந்மாத்திரைகள் முறைமாற்றமாக வமைக்கப்பட்டன. சப்தமாகிய முதற்றந்மாத்திரையை ஓசை என நாலாவதிலும், ஸ்பரிசமாகிய இரண்டாவது தந்மாத்திரையை ஊறு என மூன்ருவதிலும், ரூபமாகிய மூன்ருவது தந்மாத்திரையை ஒளி என இரண்டாவதிலும் ரஸமாகிய நாலாவது தந்மாத்திரையைச் சுவை என முதலிலும் அவரமைத்தமையால், பஞ்சதந்மாத்திரைப் பிரஸங்கத்தில் நமது ஐயரவர்களுக்கு இந்தத் திருக்குறள் பிரமாணமாகாதென்றே தீர்மானிக்கின்ருேம். நம்மவரது சித்தாந்தப்படி நாயனுரும் பாடவறியாதவரென ஏற்பட்டது. அன்றியும், திருவள்ளுவமாலையில், "இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கும்" என நரிவெருத்தலையார் கூறினர். இதில், அறம் பொருள் இன்பம் வீடென்னும் புருஷார்த்தம் முறைமாற்றமாக வைக்கப்பட்டது. முதலாவதாகிய அறத்தை மூன்ருவதிலும், மூன்ருவதாகிய இன்பத்தை முதலிலும்

அவரமைத்தமையால் இதுவும் நமது ஐயரவர்களுக்கு வேம்பாகு மென்றே நினைக்கின்றேம். இவரும் பாடவறியாதவராயினர். இம்மட்டோ, திரிகடுகத்தில், "விருந்தின்றி யுண்டபகலுந் திருந்திழையார்ப், புல்லப்புடைபெயராக்கங்குலும், இல்லார்க்கொன், றீயாதகன்றெழிந்த காலையுமிம்மூன்றும், நோயேயுரனுடையார்க்கு" என நல்லாதனு ரருளிச்செய்தனர். இதில், காலை பகல் இரவு என்னுங் காலவரிசை முறைமாற்றமாக நிறுத்தப்பட்டது. முதலாவதாகிய காலையை மூன்றுவதிலும், இரண்டாவதாகிய பகலை முதலிலும், மூன்றுவதாகிய இரவை இரண்டாவதிலும் அவர்மைத்தமையால், இதுவும் நமது ஐயரவர்களுக்குக் கசந்து எட்டியாகுமென்று எண்ணுகிறேம். இவருக்கும் பாடத்தெரியாது என்று தீர்மானமாயிற்று. இன்னும் பாடத்தெரியாதவர்கள் நமதுஐயரவர்களுடைய புதுஸித்தாந்தப்படிப் பலருண்டாகத் தட்டில்லை. இனியேனும் பூர்வபட்சியார் இப்படிப்பட்ட வஸங்காத்மவாதத்திற்றலைப்பட்டு வருந்தாதிருப்பாராக.

நம்மவர் ஆதியிற்கொண்டவாதம் "ஞானம் நாலு என்பதை யாம் யாண்டுங் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை" என்பது. இவர் காணுததும், கேளாததும் இவருடைய குறைவேயன்றி வேறில்லை. பின்னர் நாயகரவர்கள் காட்டக்கண்டார். அப்படியே கேட்டார். இம்மட்டிலமைந்தால் ஸுகம். தாம் கண்டதுமில்லை கேட்டதுமில்லையென முன்கூறியதை நினைந்து மானமேற்கொண்டு அந்த நாலுஞானம் ஸம்பந்தருக்கல்ல, அவரிற் கிழிட்டவர்க்கு என மெல்லநழுகவிடந்தேடினர். எவருக்காயினுமாகுக. தாம் முதற்கட்கூறியது தலைகவிழ்ந்தது. இப்போது கூறியதே அப்போது அவர் துணிவாயின், இதனை முதலிலேதானே கூறியிருப்பர். நாயகரவர்கள் சித்தியார்ப்பிரமாணத்தைக் காட்டுவதன்முன்ன ரவருக்கு அறவே தெரியாதாகையால் ஸமயத்துக்குத் தக்கவாறுகூறித் தப்ப வழிதேடுகிறர். இவர் தப்பு மாறுது. நம

மவ ரெவ்வளவுகஷ்டப்பட்டுத் தமதுதப்புக்கு ஆதரவு தேடியும், அது பெருங்காற்றிற்பட்ட பூளையாயினமை யால், அவரெடுத்தவெடுப்பு இடுப்பொடிந்துவிழ்ந்தது. அன்றியும், கேட்டலாதிகள்வேறு, அபரஞானம்வேறு எனக்கொண்டு கூறியவஸங்கதமும் தலைசாய்ந்தது. கேட்டலாதிகள் ஸாமுசித்தருக்குக்கூடாது, அபரஞானமே அவருக்குக்கூடும் என்றவபஸித்தாந்தமுந்தட்டழிந்தது. நிட்டைவேறு, பரஞானம்வேறு என நினைந்துகூறியதும் நிலைகுலைந்தது. இப்படி நம்மவரதுபட்சம் நிரஸ்தமாயின மையால், இனி நம்மவர் ஞானஸம்பந்தவள்ளலை ஸாமுசித்தரெனக்கூறிய வாபாஸத்தையுங் கொஞ்சம்விரித்துப் பரிஷ்கரிப்பாம்.

நம்மவர் தமதுசூருவளி (கூ) வது பக்கத்தில் "போதமுலைசுரந்தளித்த புண்ணியத்தாயாரையும்" என்றுகாட்டிய வாக்கியத்தில் ஞானஸம்பந்தருக்கு உமாதேவியார் புண்ணியத்தாயார் என விதந்தோதப்பட்டனர். "ஈசர்மிழலையிறையவர் பாலிமையப்பாவைதிருமுலைப்பா, றேசமுய்யவுண்டவர்தாந் திருமாமகனாராதலினால்" என்னுஞ்செய்யுளில் கண்டிப்பாக ஞானஸம்பந்தர் சிவகுமாரர் எனக்கூறப்பட்டனர். இவர்மாத்திரமே சிவகுமாரர்என்பது போதரவே "கைத்தொண்டாகுமடிமையினால் - வாசியில்லாக்காசுபடி பெற்றுவந்தார்வாகீசர்" எனஅப்பர்சுவாமிகடன்மை இவர்தன்மையில் வேறுகப்பிரித்தோதப்பட்டது. இப்படிப் பலபாடல்கள் சேக்கிழார்வாக்கிற் பெறப்பட்டன. அன்றியும், நமது ஐயரவர்கள் பிரமாணமாகத்தழுவிய சீகாழிப்புராணத்தில் "ஞானசம்பந்த வள்ளலாய்முருகன்வந்துதித்த, பான்மையுண்டு" எனவும், "தோன்றலாமயில்வேன் முருகனைப்பெறுவான் றூய்தவம்புரிந்தனன்" எனவும், "மதலையாய்வந்தனன்கந்தன்" எனவும் பெறப்பட்டன. கந்தரந்தாதியில், "திகழுமலங்கற் கழல்பணிவார்சொற்படிசெய்யவோ, திகழுமலங்கற் பகவூர்செருத்தணி செப்பிவெண்பூ, திகழுமலங்கற் பருளுமென்னவமண் சேனையுபா, திகழுமலங்கற் குரைத்தோனலதில்லை தெய்வங்களே." என்னும்பாடலில், தம்முடைபதொண்டர்களுக்கு நன்னெறியாகத் தேவாரமெ

ன்னுந் தமிழ்வேதத்தை மொழிந்தருளினவரும், திவ்விய தலங்களைத் துதியாமலும், திருநீற்றுமகத்துவத்தைக் கைகொள்ளாமலுமிருந்த சமணர்கள் கழுவேறும்படி வாதினால்வென்றவருமாகிய ஞானசம்பந்தமூர்த்திகளெ ன்னுங் குமாரக்கடவுளையன்றி வேறுதெய்வங்கிடையாது என ஸ்ரீமத் அருணகிரிநாதர் இனிது பிரகாசப்படுத்தினர். இவற்றால் ஞானஸம்பந்தர் சிவகுமாரரெனவும், அவரே பரமபதியெனவுந் தீர்மானமுண்டாயிற்று. இப்படி யின்னுமநேகம்பிரமாணங்களுள. இவற்றின்விரிவை நாயகரவர்கள் வெளியிட்டிருக்கும் ஆசாரியபிரபாவத்திற் செவ்வனேயறியலாம். இவரைத் தெய்வமெனவும், பரமபதியெனவும், கடவுளெனவும் பலபடியால் உத்தமோத்தம பிரமாணங்களுளவாயாடாநிற்கவும் இவைகளைக் கவனியாதவர்போல "ஞானஸம்பந்தர் ஸாமுசித்தர்" என நமது பூர்வபட்சியார்தொடுத்தது சிவாபராதத்தை விலை கொடுத்து வாங்கிக்கொண்டதாக முடிந்தது. நாயகரவர்கள் ஞானஸம்பந்தரை வைநயிகராகக் கூறியிருந்தால், ஐயோ அவர் சாமுசித்தராயிற்றே, எப்படிஅவரை வைநயிகராக்கலாம் என்று பூர்வபட்சியார் மனந்துடிக்கலாம். நாயகரப்படியொன்றும் பிரஸ்தாபியாதிருக்கவும், நம்மவர் ஞானஸம்பந்தரைப்பரிந்து புழுவாய்த்துடித்தது ஆச்சரியம். ஐயரவர்கள் துடித்தது ஞானஸம்பந்தரைப் பரிந்தன்று, கேட்டலாதிகளையறியாது தாம் கூறிய வஸங்கதத்தைப்பரிந்து. அஸங்காத்மவாதியாகிய தம்மைத்தாம் பரிந்துகூறினராகையால், அவருக்கு ஞானஸம்பந்தர் எப்படியாவதிலுந் துக்கமில்லை. அவரைத் தாழ்வுகூறுவதில் துக்கமுண்டாயின், மேற்போந்தபிரமாணங்களால் பதிப்பொருளாகத் தெளியத்தக்க அவரைப் பசுவாகவும், பசுவினும் ஒருமலவிருமலங்களையுடைய விஞ்ஞானகலர், பிரளயாகலர்களினுங்கீழிட்ட சகலராகவுங்கொண்டுகூற மனந்துணியமாட்டாது. சகலர்களாகிய பசுவர்க்கத்தின் முதல்வகுப்பில் நம்மவர்

ஞானஸம்பந்தருக்கு இடந்தேடியது அவ்வமலமூர்த்திக்கு மானியம்விட்டதாகத் தம்மைத்தாம் வியந்துகொள்ளுகிறுர். இது என்போலுமெனின், ஓர் சக்ரவர்த்தியைப் பிரஸ்தாபித்து, இவர் குப்பைவண்டிமேஸ்திரியன்று, ஜட்காவண்டிமேஸ்திரியென்று பரிந்து சாதிக்கத்தலைப்படுவது போல்வதேயாம். இனி நமது ஐயரவர்கள் ஞானஸம்பந்தர் பதிப்பொருளன்று, மலப்பசுவேஅவர் என்றுசாதிக்கக் கடமைப்பட்டிருக்கின்றுர். அப்படியுஞ்செய்யப்பின்னிடார். சிவனைப் பசுவென்றுகூறும் பாஞ்சராத்திரியையும், சிவனுகியபதியும், தானுகியபசுவும் ஒன்றேயெனக்கூறும் மாயாவாதியையும் இனி ஐயரவர்கள் தமக்குத் துணைசேர்த்துக்கொள்ளவேண்டியதே. உண்மைகண்டறியாத சைவப்போலியாக நம்மவரினியும் வெளிப்படாமல், தமக்குப்பெருமான் படர்க்கைமுகத்தால் விளக்கும் போதமாமிதுவெனத்துணிந்து குணப்படுமாறு அவர்மாட்டிரங்கிவருந்துகின்றேம். இல்லையேல், தமக்கிப்போது அரிதிற் கிடைத்திருக்கும் (மஹாசைவப்பேறு) மெல்லநழுக வழிதேடுவதாகமுடியும். மேற்போந்த பிரமாணபரியாலோசனையால் நமதுஅருளாளர் பரமபதியெனத் துணியப்பட்டனர். அதனுல், அவரை விஞ்ஞானுகலராகநினைக்கினும் நிரயத்துன்பம் வந்துசேரத்தட்டில்லை. அவர் பரமபதியாதலை நம்மவர்தழுவிக்கொண்ட சிதம்பரசுவாமிகள்கூறிய "சைவப்பயிராவளர்க்குந்தண்மேகந்தகைமைசெறி, செய்வைத்தவேல்கொண்டுபோரூரிலென்றுநிகழ் தெய்வமே" என்னுஞ்செய்யுளை யோசித்தேனும் அடங்குவாராக. அன்றியும், தேவாரத்தில் "பதியானஞானமுனிவன்" எனவும், "சுற்றுமுற்றுமாயினு னவன்பகர்ந்தசொற்கள்" எனவும் போந்தபகுதிகளால் பதிப்பொருளாகிய சம்பந்தன் எனவும், மேல்கீழ்நடுப்பக்க முதலாயுள்ள வெல்லாப்பொருள்களுந் தானேயாயசம்பந்தன்எனவும் அவர் பெருமை யினிதுபெறப்படுதலுங்கண்டு ஒதுங்குவாராக. இந்தஸுபோதம் ஐயருக்குமாத்திரமேயல்ல, அவரது

ஸகோதரராக யாழ்ப்பாணத்தி லோர்நவினநாவலர் பிர வர்த்திக்கின்றமையா லவரும்பார்த்துத் தமது விபரீதம் விலகி ஸுகிப்பாராக.

இன்னேர் ஓர்பாடம் படித்திருக்கின்றூர்கள். என் னெனின், தங்களுக்குத்தெரியாதவொன்றை மற்றெ ருவர்சொன்னுல், அதை ஒப்பக்கூடாதென்பதே. ஒப் பினுல், தங்களுடைய பாண்டித்யம் பழிப்பெய்துமெ ன்பது அவர்துணிவு. அதனுல் தங்கள்ஸாமர்த்தியத் தைக்காட்டிக் கரணம்போடுகிறூர்கள். எங்ஙனமெனி ன், ஞானஸம்பந்தர் மாதாவுதரத்திற்றங்கிப் பிறந்தாரெ ன்று பெரியபுராணங் கூறுகிறதெனவும், ஸ்காந்தத்தில் முருகக்கடவுள் அவ்வாறுபிறவாதவர் என்று சொல்ல ப்படுகின்றூரெனவும், அதனுல், யோனிஜராகப் பிறக்க வேலாதவராகிய முருகக்கடவுள் யோநிஜராக ஞானஸம் பந்தநாமத்தாற் பிறந்தாரெனல் கூடாதெனவுங் கூறுவ தேயாம். ஆயின், அந்தப் பெரியபுராணத்தில் ஞானஸ ம்பந்தரைச் சிவஸூநுவென்று பலவிடங்களிற் கூறுவ தென்னேயென வவரைக்கடாவின், அது உபசாரமென்று கூறுவர். வேறுயாரையுங்கூறுமல், அவரைமாத்திர முப சாரமாகச் சிவஸூநுவென்று பிரஸ்தாபிக்கக் காரணமெ ன்னே? தாம்கூறியது உபசாரமென்று சேக்கிழார் எங் கேகூறினுர். அல்லது வேறு எந்தஆசாரியர் கூறினர்? தம்மகட்சி நழுவுகிறபோது தேடும்ஸமாதானமிதுவா கையா லிதனே ஸத்துக்கள் காற்கடைகொண் டொதுக்கு வார்கள். ஞானஸம்பந்தர் அயோநிஜரென்று பெறப்ப ட்டால், அப்போது அவர் சுப்பிரமணியக்கடவுளாதலேப் பூர்வபட்சிக ளங்கீகரிக்கவேண்டியதல்லவா? அதற்கு வேண்டிய நியாயத்தைக் கண்டுபிடிப்பதொழிந்து தாங்கு றிவழியு மஸங்கதத்தைநாட்டுதற்கு முத்துலேபோட்டு வருந்துவது அவர் பாவமேயாம். இந்த வித்வசிரோம ணிகள் திருவிளேயாடலில் சிவபெருமான் தேவியாருக் கும், சுப்பிரமணியருக்கு மிழிந்தஜந்மங்க ளுண்டாகச்

சர்பங்கொடுத்ததை யெவ்வாறு கொண்டார்களோ தெரியாது. சாபமேற்றுப் பிறந்துழன்றமையால், தேவியும், முருகக்கடவுளும் பதிப்பொருள்களாகமாட்டார்களென்பார்போலும். அவர் பசுக்களெனவும், அவர்களைத் தெய்வங்களென்றுகூறியது உபசாரமேயெனவும் இனி நம்மவர் நாட்டவேண்டியது. யாழ்ப்பாணிகளுள், இன்னுஞ் சிலபோலிவித்வான்கள் சிவன்மாத்திரமே பிறவாதவர் எனவும், சுப்பிரமணியர்முதலினோர் சிவனது அமிசமாகையால், அன்னோர் பிறக்கலாமெனவுங் குழறிவழிவதுண்டாகையால், அஸங்காத்மவாதிகளுக்கு எது எப்படியாவதிலுந் துக்கமில்லை. சம்பந்தர் பிறந்தாரென்று தோஷங்கூறிவந்த வின்னோர்க்கு முருகக்கடவுள் சாபமேற்றாரென்கிற தோஷத்தையெடுத்து யாம்காட்டினோமாகையால், சாபதோஷத்துக்கு நிவிர்த்திதேடும் புத்திமான்களுடைய ஸதஸில், ஜந்மதோஷத்துக்கும் நிவிர்த்தியுண்டாகாமற் போகாது? அவர்கள் சபையில் சாபமேற்றது நாடகமாத்திரமாகத் தீர்மானிக்கப்படும். அப்படியே ஜந்மமேற்றதும் பரிகாரத்தைப்பெறும். சாபமேற்றதே கிடையாது என்று ஸித்தாந்தப்படுவதுபோல, ஜந்மமேற்றதே கிடையாதுஎன ஸித்தாந்தப்படத்தட்டில்லை. சாபம் குமாரக்கடவுளுக்கும், ஜன்மம் ஞானஸம்பந்தருக்குமென முறையேகொண்டு குணப்படவேண்டியது. ஞானஸம்பந்தர் ஜந்மமேற்கவில்லையென்னும் வாய்மையைப் பலபடியால் பெரியபுராணமாகிய சேக்கிழார் வாக்கானும், ஏனைப் பிரமாணவுண்மைகளானும் நாயகரவர்கள் தமது ஆசாரியபிரபாவத்திற் செவ்வனேவிளக்கி யிருக்கின்றார்களாகையால், அவைகளைச் சித்தஸமாதானத்துடன் இனியேனும் வாசித்து அடங்குவாராக. ஞானசம்பந்தருக்குக் கர்ப்பவாஸதோஷமில்லையென்று சாதிப்பது எமதுகடமை. முருகக்கடவுளுக்குச் சாபதோஷமில்லையென்றுசாதிப்பது அவர்கள்கடமை. அவர்களுக்கு முடியாதாயின், எமதுநாயகரவர்கள்பக்கலடைந்து

கேட்டுத் தெளிந்திடுவாராக. பிரகிருதத்தி லந்தத்தோஷத்துக்குப் பரிகாரமுரைப்பது எமக்கு அவசியமன்று. அவசியம்வந்துழிப் பரிகரித்துக்கொள்ளப் பின்னிடேம். இவ்வுண்மைகளையறிந்து குணப்படாமல் தத்தாபித்தாவென்று மேலுங்குழறிவழிந்தால், அவர்களுக்குப் பதில்சொல்லவேண்டியபொறுப்பு வைவஸ்வதனுடையதாகவே முடியும்.

எங்ஙனமெனின், சேக்கிழார்பெருமான் ஞானஸம்பந்தருக்குக் கர்ப்பவாஸங்கூறிவிட்டு, அத்தகையாரைச் சிவஸூநுவென்று ஓரிடமன்றிப் பலவிடங்களிற்கூறி மயங்கவைத்தாரென்னுங் குற்றத்தையேற்று யாவராலும்நிந்திக்கப்படுவர். ஒன்றிலொன்றுவிரோதித்தவமிசங்களைக்கலந்து தாம் சொல்லுகிறபோது அவைகளுக்குப் பரிகாரமுங் கூடவேசொல்லவேண்டியது. அங்ஙனமவர்செய்யாமையால், ஸமாதானஞ்சொல்லத்தெரியாதவரெனவாவது, நாம் குற்றங்கூறுகிறோமென்று தெரிந்துகொள்ளாதவரெனவாவது அவர்பிசகியதோஷத்தைநாட்டி அவர்மேலறியாமையையேற்றிப் பாவத்துக்குமடிகட்டிக்கொள்ளவேண்டும். இந்தத்தோஷங்களெல்லா முண்டாகாமல் சுகப்படுவதற்கு ஆசாரியபிரபாவம் அதிகவுபகாரத்தைச் செய்யுமாகையால், அதனையாவருங் கடைப்பிடித்தொழுகுவது அவரவருமுய்யும்வழி தேடுவதாகமுடியும். ஞானஸம்பந்தர் பரமபதியாதலை ஒழிவிலொடுக்கச் சிறப்புப்பாயிரத்துரையில், "ஓதியுணர்ந்தவவ்வாசாரியர்க்கெல்லாமவரவரறிவின்கணருளுருவாய்நின்றறிவித்துமாசாரியவுருவாய் வெளிநின்றநுக்ரகித்துநின்றனர்" எனவும், "பிள்ளையாரிவ்வவதாரத்தின்மேனின்றவவதாரத்தினுங்குமாரசற்குருவா யரனூர்க்குமகத்தியனூர்க்குமுபதேசித்தருளியவாசாரியத்தலைமையுங்குறித்தது" எனவும், "இதனை யுடையபிள்ளையாருந் தமதுகடவுட்டன்மை வேறுபடாது, தம்புருடவடிவங்கொண்டுநின்றதம்மையன்பானுள்ளூன்றி நோக்கினூர்க்குக் குமாரசற்குருவென்னும் பெயர்கொண்டளவிகந்த சூரியருதயம்போன் றொளிவீசுந் தம்முன்னுருவாய தெய்வத்திருவுருவுட்கொண்டு விளங்கக்காட்டிநின்றனர்" எனவும், "தலையில்வைத்து

என்னுது தலைமேல்வைத்து என்றமையான் மறைமுடிக்கண்ணேவ யங்காநின்றவச்செல்வத்திருவடியின்சீர்மைதோன்றிற்று'' எனவும் ஓர்பெரியவர் எழுதியிருக்கின்றனர். அவரது உண்மையும்,அருமையும் அன்பில்லாதசிவத்துரோகிகளுக்கு எங்ஙனஞ்சிறக்கும்? எமதுகாழிப்பிரானுரதருமையும், பெருமையுமறிந்து, அன்பேவடிவமாய்க்கரைந்து,அவரடியையே தாரகமாகவடைந்தின்புறு மெம்பெருமக்களமுதவாக்குகளே யெமக்குற்றநிதியாமெனக்கொண் டிறுமாந்து வாழும் யாம், பாவம்பழுத்துப் பயன்றுய்ப்பாராகவுழந்தலையு மிழிஞர்கூற்றை யென்றுமோர்பொருளாகமதித்து வருந்தேம்! வருந்தேம்!! விரிக்கிற்பெருகும்.

இதுநிற்க, சிவஞானபோதச்சிற்றுரையில் "ஆளுடையபிள்ளையார் முதலாயினூர்க்குத் தவமின்றியு ஞானநிகழ்ந்தவாறென்னையென்னுங் கடாவை விடுத்தற்கு மேற்செய்துழியென வீண்டும்வலியுறுத்தார்'' என விதந்தமையால் ஞானஸம்பந்தர் தமது முற்பிறப்பிலீட்டிய தவத்தின்பயனுக ஞானத்தையடைந்தாரெனவும், அதனுலவர்பலசந்மங்களையுடையவோர்பசுவாத லமையுமெனவும் பூர்வபட்சிகள்பிரமிக்கின்றூர்களாகையா லதனையுங்களைந்தெறிவாம். சிவஞானமுனிவர்வாக்கு ஸ்வதப்பிரமாணமாகாது. யாதானுமோராதரவைமுதலாகக்கொண்டு அவர்கூறுவதுமாத்திரமே பிரமாணம். ஞானஸம்பந்தரது பூர்வஜந்மம் இது எனவும், அவ்வுண்மை இன்னபிரபலபிரமாணத்திற் பெறப்பட்டிருக்கிறதெனவும் முதல்தெரியவேண்டியது. அது தெரிந்தபிறகு அவரைக்குறித்தவோர்யோசனை செய்யவேண்டியது. அஃதொன்றுமின்றிச் சிவஞானமுனிவர் உலகிற்பலர்பலவிதமாகவபிப்பிராயப்படுகிறபடித் தாமுமொருவிதமாக அபிப்பிராயப்பட்டெழுதியதையோர்முக்கியப்பிரமாணமாக வாதரிப்பது கூடாது. இவருடைய அபிப்பிராயம் ஸர்வ சைவஸம்பிரதிபந்நமாகாதென்பது திருவண்ணாமலையாதீனத்தார்முதலிய மேலோர்க ளவர்நூல்கள்யாவையு மங்கீகரியாமையே சான்

றுகூறும். இதனல், பூர்வபட்சிகள்கருத்துப் பூர்த்தி கட்டாதொழிந்தது. இனிச் சிவஞானமுனிவரை யாம் தாழ்வுகூறினதாகச் சிலரெண்ணக்கூடும். இது அவர் ஞானஸம்பந்தரைப் பசுவென்றுதூஷிக்குந் தூஷணத் துக்கதிகமாகாது. எம்மைநோக்கி யவருக்கோர்தூஷண மேற்றுவதுதான் குற்றமாகுமன்றி அவருக்கு மெமக் கு மேனையுலகுக்குங் குருவுந் தெய்வமுமாய் விளங்கு ம் பிள்ளையாரைநோக்கி யேற்றுந்தூஷணங் குற்றமாகா து. அவரெழுதியவசனத்துக்குப் பூர்வபட்சிகள்கொண் டகருத்தைத்தழுவின லந்தத்தூஷணமேறுகிறதேயன்றி வேறுவிதமாகக்கொண்டா லேறவிடமில்லை. அவருக் குத் தோஷங்கற்பிக்கக்கூடாது என்னுமபிமானமுள்ள படியேயிருந்தால் நம்மவர் பின்வருமாறு அதற்குப்பொ ருள்கொள்வாராக. எங்ஙனமெனின், சிவன் யோகிருந் தானெனவும், அதனலவர் யோகியாயினரெனவும், சிவ னுமையை மணந்தானெனவும், அதனலவர் போகியாயி னரெனவுங்கூறி யுண்மையிலவர் யோகியுமன்று, போகி யுமன்று என வுண்மைநூல்களி லச்சிவபரஞ்சுடரைத் து திக்குமநுபூதியையே தழுவவேண்டியது. அன்றியும்,ஞா னஸம்பந்தர் தெய்வமாயினும், கூத்தில்வெட்டிவேடம் போட்டவ னவ்வேடத்துக்குத்தக்க நாடகம்புரிதல்போ ல வுயிர்களுக்குச் சைவநடைபயிற்றுவிக்க மாநுஷ்யவிக் ரஹமாகி யாசாரியப்படிவந்தாங்கலா லம்மநுஷ்யதர்மா ரோபணமேற்கொண் டியங்கியவாய்மையை யநுஸரித் துக்கூறினரெனினுமமையும். இப்படிக்கன்றி வேறுகுமா ர்க்கஸஞ்சாரஞ்செய்வது சிவநிந்தை சிவனடியார்நிந்தை யாகமுடியும்.

இதுகாறும் பிரகாசிப்பித்த வுண்மைகளால் ஞான ஸம்பந்தர் பசுவர்க்கத்திற் படிக்கத்தக்கவரல்லரெனவு ம், பரமபதியெனவும் நிச்சயிக்கப்பட்டமையால் ஐயர வர்கள் அவருக்குக்கற்பித்த ஸாமுசித்தநிலையும், அபர ஞான பரஞான ஸித்திகளும் அவலமாயின. யாம் அவ

ருக்குக்கூறுங் கேட்டலாதிகள் அவரைப் பசுவர்க்கத் திற்கொண்டன்று. பதியாகக்கொண்டே கூறியபடியாம். எங்ஙனமெனின், "வேதநெறிதழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கப் - பூதபரம்பரைபொலியப் புனிதவாய்மலர்ந்தழுத" எனவும், "அம்பிகையளித்தஞான மகிலமுமுய்யவுண்ட, நம்பெருந்தகையார்" எனவும், "ஞாலமுய்ந்திட ஞானமுண்டவர்" எனவும், "அஞ்செழுத்தோதியேறினுருய்யவுலகெலாம்" எனவும், "வையமேழுடன் மறைகளுங்கிறைதவத்தோரு, முய்யஞானசம்பந்தன்வந் தானெனவூத" எனவும், பெறப்பட்டவாக்கியங்களால் பிள்ளையார் பொருமியழுததும், ஞானமுண்டதும், ஸ்ரீபஞ்சாட்சரத்தையோதி முத்துச்சிவிகையி லாரோகணித்துக்கொண்டதும், பதிகடோறுஞ்சென்று பவனிவந்ததுமாகிய யாவும் ஸ்வப்ரயோசனமன்று,பரப்பிரயோசனமென ஏற்பட்டன. "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்று கூறியபடியமைந்தநலமே அவர்பாலெய்தும். இதனல், கேட்டலாதிகளை யாம் அவருக்குஸமர்த்திக்கத் தட்டில்லை. சிவிகையிலேறியதே பரப்பிரயோசனமாகிறபோது, ஞானமுண்டதுதானு பரப்பிரயோசனமாகாது? அவரதுசெயல்யாவும் பரப்பிரயோசனமேயாம். இத்தகைய பெருந்தகையார்பாற் கேட்டலாதிகளைப் பொருந்தக்கூறுவது ஸர்வஸம்பிரதிபந்நமாயிற்று. உமாதேவியாருக்குச் சிவபெருமான் ஸர்வகலைகளையு முபதேசித்தானெனவும், கணநாதர், ஸ்கந்தர்முதலினேர்க்கு ஞானேபதேசஞ் செய்தானெனவும், சிவன் பார்வதியாரைத் திருக்கலியாணஞ் செய்துகொண்டானெனவும், ஸ்ரீதக்ஷிணமூர்த்தியாகவெழுந்தருளி யோகத்திலிருந்தானெனவும்,இன்னு மநேகந்திருவிளையாடல்களைப் புரிந்தானெனவும் உண்மைநூல்கள் கூறும்யாவுஞ் சிவனுர்மாட்டுப் பரப்பிரயோஜனர்த்தமான ஸமர்த்தனத்தையே யபேக்ஷிக்கையால், அதுவே அப்பரசிவஸூநுவாய்விளங்கு ஞானஸம்பந்தர்மாட்டுஞ்சிறக்கும். இவ்வுண்மைகளைத் தெளிந்தபேர் பிள்ளையாருக்கு யாம்ஸமர்த்திக்குங் கேட்டலாதிகளை விரோதித்து அபராதார்ஜிதஞ் செய்யார்கள். இன்னும் விரிக்கிற்பெருகும்.

ஞானநூலாகிய சிவஞானசித்தியானது "பார்விரிந் தநூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே, யோர்விருத்தப் பாதிபோ தும்" என்றபடி உயர்வொப்பில்லாததாக விளங்குவது. சிவஞானபோதமென்னு முதனூலின்வழிவந்தது. இது முதனூலையநுஸரித்து அதிற்பெறப்படும் பன்னிரண்டு ஸூத்திரங்களுக்குப் பாஷ்யமாகவிளங்கிப் பர்பக்ஷஸ்வபக்ஷபேதங்களாகப் பிரிந்து அறுநூறுபாடல்களாகவிரிந்து உண்மையைப் பயப்பது. மூலஸூத்ரமும், விவரணமாகிய இதுவும் ஊசியும் நூலும்போ லியங்குவன. மரமும் நிழலும்போல விளங்குவன. ஒன்றையொன்ற பேக்ஷித்து ஓங்குவன. இப்பெருநூலில், எட்டாஞ்சூத்திரம் பசுபாசங்களைக் கடந்த பதிஞானத்தைப் பிரதிபாதிப்பது. இவ்வெட்டாஞ்சூத்திரம் முப்பத்தாறு பாடல்களாகப் பொருள்வடிவங் கொண்டிருக்கின்றது. இதில், இருபத்துநாலாவது பாடல் "கேட்டலுடன் சிந்தித்தறெளித னிட்டை கிளத்தலெனவீரிரண்டாங் கிளக்கின்ஞானம்" என எமது ஸித்தாந்தமாகி ஞானபேதத்தை யறிவிப்பது. இதற்கு முன்பாடல் "ஞானநூறனையோதலோதுவித்த னற்பொருளைக்கேட்பித்த ருன்கேட்டனன்று, வீனமிலாப்பொருளதனைச் சிந்தித்தலைந்து மிறைவனடியடைவிக்கு மெழின்ஞானபூசை" என ஞானபூசையின்பேதத்தைத் தெரிவிப்பது. இவையிரண்டும் ஒன்றாகா. ஞானபூசைஐந்து, ஞானம்நாலு எனப் பேதந்தோன்ற விதந்திருக்குநுட்பந் தேராமல் "சிவனடியே" என்னும் பாடலுக்கு ஞானபூசையைப் பிரதிபாதிக்கும்பாடலைப் பிரமாணமாகத் தழுவுவதுஞ் சேராது. நம்மவர், சிவப்பிரகாசத்தில் ஞானம்இரண்டு எனவந்த பாடலைத்தழுவிச் சோர்ந்தாராகையால், ஞானம் என்னும்பதம் வந்துவிட்டதுகொண்டே இது நமக்கு ஸாதகம் என்று ஒருவர்தழுவி வெளிவருவது நிலைக்காது. அந்தச் சிவப்பிரகாசத்தில் "பாசமாஞானத்தாலும் பகர்பசுஞானத்தாலு, மீசனையறியவொண்ணு திறையருண்ஞானநண்ணி" என மூன்றுஞானங் கேட்கப்படுதலையும், அனந்தரம் "நேசமோடுயர்பரத்து நிற்பதுஞானநிட்டை" என வவ்விறையரு

ஸ்ஞானத்தை விதந்திருப்பதையு மறிந்தபேர் நமது ஐயரவர்கள் விபரீதத்தைமதியார். நிட்டைஞானத்தை யீண்டுப் பிரகாசப்படுத்தியதேயன்றி "முந்தியவொருமை யாலே மொழிந்தவைகேட்டல்கேட்டல், சிந்தனைசெய்த லுண்மை தெளிந்திடலதுதானுக, வந்தவாறெய்தனிட்டை மருவுதலென்றுநான்காம்" எனக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னு ஞானங்களை முறையாகவும் நான்கு என விரித்தனர். நிட்டையைப் பிரித்தோதுங்கால் "பரத்துநிற்பது ஞான நிட்டை" என விளக்கினமையால் நிட்டையே பரஞானம் என யாம்பரிஷ்கரித்தது நிலைபேருயிற்று. ஏனை மூன்றும் அபரஞானமென்பதுசொல்லாமே யமையும். நம்மவரபிமானித்துக்காட்டிய சிவப்பிரகாசவியாக்கியானத்தையே அவர்பார்த்துத் தெளிந்திடுவாராக. அவ்வாறு தெளியின், "ஞானம் இரண்டு" எனக்கிடைத்ததை யெடுத்துக்கொண்டு இனி எமக்குப் பூச்சிக்காட்டவரமாட்டார்.

இங்ஙனநிற்க, ஞானம் நாலு என்னும்விஷயத்தில் பிரமாணமாகத்தேர்ந்த"கேட்டலுடன்சிந்தித்தறௌிதனிட்டை களத்தலென வீரிரண்டாங் கிளக்கின்ஞானம்"என்பதற்கு "மேற்கூறியஞானவேள்வியைந்தனுள் முன்னையமூன்றினும் ஆசிரியனறிவுறுக்கு முண்மைஞானம் நிகழாமையின் உண்மைஞான மெனப்படுவன எனைக்கேட்டல் சிந்தித்தல்களும், சிந்தித்தலைப் பின்னர்த் தெளிதலும்,தெளிந்தவாறே யதன்பின்னிட்டைகூடுதலுமென்னு நான் கேயாம்" எனச் சிவஞானமுனிவர் பொருள்விரித்திருக்கின்றனர். இதில், "உண்மைஞானமெனப்படுவன நான்கேயாம்" எனச் சித்தாந்தப்படுத்தினுராகையால், இதற்கு வேருகக்கூறு ஞானபேதங்களும், ஞானவிலக்கணங்களும் அஸம்பிரதாயஸித்தமாக முடிந்தன. அன்றியும், அச்சிவஞானமுனிவர் சித்தியார்ப் பாயிரத்துரையில், "மறையினு லயனுல்" எனச் சிவனையறிவரியானெனத் தெரிவிக்குஞ் செய்யுளுக்குப்பின்னர், "அருளினுலாகமத்தே யறியலாம்" எனவச்சிவனையறிவிக்கத்தொடர்ந்த செய்யுளில், "அவனை யவ்விறைவனுலெனப்படும் வேதஸாரமாகிய சிவாகமத்தி னனுபவமுடைய தேசிகரருளிச்செய்யும் உபதேசத்தாற் கேட்டறியலாம்; கேட்டதனை அதற்கநுகூலமான வளவையாற் சிந்தித்து மறியலாம்; சிந்தித்ததனைத் தன்னறிவின்கண்ணே சிவஞானத்தான்மாசறத் தெளிந்துமறியலாம்; அதனுற் பாசக்ஷயம்பண்ணி நிட்டைகூடிச் சிவாநந்தாநுபூதியும் பெறலாம்" எனச் செவ்வனே கேட்டலாதிகளையே யினிதுவிளக்கினர். இதனுல், கேட்டலாதி நான்குஞானங்களைப் பிரதிபாதிக்

கவே ஞானநூலாகிய வதுவும், அதன்முதனூல் சார்புநூல்களு மெழுந்தவெனலமைவுடைத்து. இந்தவுண்மைஞானசதுஷ்டயமே சிவஞானம், பாங்கினிலோங்கியஞானம், கலைஞானம், மெய்ஞ்ஞானம் எனப்போந்த சேக்கிழார்பெருமான்கூறிய ஞானங்களோடிசைந்து ஒன்றாகும். முடிக்கு ஒத்தமகுடமாகக்கிடைத்த விதனையேற்றுமகிழாமல் முடிக்குச்சரிப்படாமலளவிற்குறைந்தும், அதிகப்பட்டுத்தளர்ந்துங் காணுஞ்சிறியனவும், பெரியனவுமாகிய விகாரமகுடங்களைத் தேடிக்கொண்டுவந்துசூட்டித் துக்கிப்பது சரியல்ல. இவ்வுண்மையை முடக்குஸந்துப்பிரசங்கியாரொருவரும் ஏதோமூலையிலிருந்து கொஞ்சம்பேசுகிறாராம். அவரும் வெளிவருவாராக.

இதுநிற்க, கேட்டலாதிஞானங்கள் ஞானஸம்பந்தருக்கு அமையாவெனச் சித்தக்கலக்கங்கொண்டுகூறு நமது ஐயரவர்களுக்கு அந்தநோய்நீங்குமாறு "ஆயகேள்வி ஞானஸம்பந்தன்" எனவும், "நல்லகேள்வித்தமிழ்ஞானஸம்பந்தன்" எனவும், "நல்லகேள்வி ஞானஸம்பந்தன்" எனவும், "நண்ணியகீர்த்தி நலங்கொள்கேள்வி நான்மறைஞானஸம்பந்தன்" எனவும் போந்த திருமந்திரங்களையுச்சரித்துப் பரிகாரந்தேடி யாருமுபகரிக்கலாமாகையால்,ஸாதுக்கள்யாவரும் இவைகளைக் கையாண்டுவருவதும் அவசியமாயிற்று. கேட்டல் என்னு மிந்தவொருமந்திரத்தைப் படிப்பதுகொண்டே அந்தத்தோஷம் பறக்குமாகையால், ஏனைச்சிந்தித்தன்முதலிய மந்திரங்களைக் கஷ்டப்பட்டுத் தேடுஞ்சிரமத்தை யாமெடுத்துக்கொள்ளாமல் விஶ்ராந்தியடைந்தோம். இனியேனும், நமது ஐயரவர்கள் நாயகரவர்களிடம் பழமைபாராட்டி யுண்மையுணர்ந்து தமதுஅஸங்காத்மவாதத்தை வெட்டிச்சாய்த்து நலமடைந்துசுகிப்பாரெனப் பிரார்த்தித்துத் திருவருளைச் சிந்திக்கின்றோம். சுபம்! சுபம்!! சுபம்!!!

வாழ்த்து.

"வாழ்க ஞானசம்பந்தன் மலர்க்கழல்
வாழ்க நால்வித ஞானங்கள் வண்பொழில்
வாழ்க மாதுமை மாதவன் மாதவர்
வாழ்க நீற்றெழில் சைவமும் வாழ்கவே."

மெய்கண்டான்திருவடி வாழ்க.